





உலக ஆயர்கள் மாமன்றம்
2021
2023

ஆரம்பம் 1969 பெப்ரவரி

ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

சமய - சமூக - இலக்கிய வெளியீடு

அறிவோம்.. அறிவிப்போம்...

நவம்பர்-டிசம்பர் - 2022



80/=





"நேர்மையாளர் இவ்வுலகிலேயே
கைம்மாறு பெறுவர் எனில்,
பொல்லாரும் பாவிகளும் தண்டனை
பெறுவது திண்ணமன்றோ!"

நீதிமொழிகள் 11:31

# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...

ஆரம்பம் – 1969 பெப்ரவரி

மலர் – 53 இதழ் – 07

நவம்பர் – டிசம்பர் 2022

ஆசிரியர் :

■ அருட்தந்தை. நிகஸ்டன் பீற்றஸ்

துணையாசிரியர் :

■ பெஸ்லியோ வாஸ்

நூல் வடிவமைப்பு :

■ சுபாஜெனி சங்கர்

வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். – 44,
மட்டக்களப்பு.

பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே...


| | |
|---|---|
| பேரொளியைக் கண்டிட நம்பிக்கை | 02 |
| இளையவனே உனக்காக | 04 |
| அருளொளி பாய்ச்சும் சுடர் | 05 |
| உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் | 06 |
| கடுகுக் கதை | 08 |
| மாணவர் பக்கம் | 09 |
| இலக்கிய மஞ்சரி | 08 |
| ஒரு வெண்மணற் கிராமம் | 10 |
| கிரகணம் | 13 |
| முடியும் என்று நம்புங்கள் | 14 |
| அந்தோனியாரும் அடைக்கலமும் | 16 |
| கூட்டொருங்கியக்கத் திருஅவை | 18 |
| வரவு செலவுத் திட்டம் | 20 |
| திருஅவைச் செய்திகள் | 21 |
| இயேசு உம்மை அவரது மறை | 22 |
| கடன் | 23 |
| இலக்கிய மஞ்சரி | 24 |
| தீர்க்க தரிசனம் | 25 |
| வினாவிடைப் போட்டி | 26 |
| திருவிவிலியம் கற்போம் | 27 |
| போட்டி முடிவுகள் | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ–ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com


விலை: : 80/=

ஆண்டுச் சந்தா : 1440/=

(தபாற் செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு...

அன்புள்ள சகோதரங்களே,

ஆண்டின் நிறைவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். கடந்த காலங்களில் கொரோனா கொள்ளை நோயின் தாக்கத்திலிருந்து நாம் படிப்படியாக மீண்டு எழுவதற்குள் நாட்டின் பொருளாதார பின்னடைவுகள், பொருட்களின் விலையேற்றம், அரசியல் ஸ்தீரமற்ற நிலைமை போன்றன பேர் இடியாக எம்மீது வந்து விழுந் துள்ளன. இவற்றில் இருந்து நாம் மீண்டெழுவது என்பதை எம்மால் நினைத்து பார்க்க முடியவில்லை. இதனால் சாதாரண மக்களின் நிலைமை என்னவாகப் போகின்றது என்ற கவலை உணர்வும் எம்முள் இருக்கத்தான் செய்கின்றது.

இவ்வாறான சூழ்நிலைகளுக்கு மத்தியில் நாம் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடவிருக்கின்றோம். மார்கழி மாதம் வந்தாலே எம் மனதில் மகிழ்ச்சியும் பெரிய ஆரவாரங்களும் களைகட்டத் தொடங்கிவிடும். ஊடகங்களிலும் கிறிஸ்து பிறப்பு தொடர்பான செய்திகளையும், கரோல் கீதங்களையும் எம்மால் பார்க்க முடியும். ஆங்காங்கே பல்வேறு இடங்களில் சோடினை அலங்காரங்கள் மற்றும் ஒளிவிழா நிகழ்வுகளையும் எம்மால் காண முடியும்.

கிறிஸ்து பிறப்பு காலமானது மகிழ்வின் காலமாக, மனமாற்றத்தின் காலமாக, பாவ இருளை களையும் காலமாக, உதவிகளை புரியும் காலமாக அமைய வேண்டும். மக்களை பாவ இருளில் இருந்து மீட்பதற்காக இறைவன் அளித்த மீட்பின் அடையாளமே இயேசு கிறிஸ்துவாகும். இயேசு பாலகனாக அவதரித்தது முதல், தான் இறக்கும் வரை மக்களுக்காக அவர் செய்தவைகளை நாம் இக் கிறிஸ்து பிறப்பு காலத்திலே நினைவு கூருவோம்.

எமது நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளை நினைவில் கொண்டு இக் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை நாம் அர்த்தமுள்ளதாக்குவோம். ஆடம்பரமான கொண்டாட்டங்களை தவிர்ப்போம். இவ் இக்கட்டான சூழ்நிலை யில் ஒருவேளை உணவிற்காக ஏங்கி உதவிகளை எதிர்பார்க்கும் உள்ளங்களுக்கு எம்மால் இயன்ற உதவிகளைச் செய்திடுவோம். நல்ல நிலையில் உள்ளவர்கள் தங்களிடம் உள்ளவற்றை இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்வோம். பிறரன்பு பணிகளில் ஈடுபடுவோம். இவ்வாறாக கிறிஸ்து பிறப்பு விழாவை அர்த்தமுள்ள தாக்குவோம்.

இதன் அடிப்படையில்தான் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தீர்மானத்தின்படி, இம்முறை ஆடம்பரமான கொண்டாட்டங்களைத் தவிர்த்து, உதவிகளை எதிர்பார்த்து இருப்போருக்கு உதவிக்கரம் நீட்டி, பகிர்வு என்ற கிறிஸ்து பிறப்பின் அடிப்படைக் கொள்கையைக் கடைப்பிடித்து, உள்ளவர்கள் இல்லாத வர்களோடு பகிர்ந்து அர்த்தமுள்ள கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுவோம்.

எம் நாடு வழமை நிலைக்கு திரும்பவும் மக்களின் வறுமை நிலை நீங்கவும் அனைவரும் நிம்மதியான மகிழ்ச்சியான வாழ்வை அடையவும், இக்காலங்களில் உருக்கமாக எமது வேண்டுதல்களை முன்வைப்போம். இறைவன் எம் எல்லோரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

"வாசகர்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா
நல்வாழ்த்துக்கள்"

- ஆசிரியர் -





- பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை -
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

# பேரொளியைக் கண்டிட நம்பிக்கை பிறந்தது"

**"கா**ரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்தது" (ஏசா *9:2*) என்பது இயேசுவின் பிறப்பு பற்றிய இறைவாக்கினர் எசாயாவின் கூற்று. வாழுமுன் வரலாற்றில் இருந்தவர் வரலாற்றில் நுழைந்த விழாதான் கிறிஸ்மஸ் பெருவிழா. மண்ணுலகில் நிறைந்திருந்த இருளை ஒளியேற்றி அகற்றுகின்றார் கடவுள். இரக்கமே உருவான இறைவன் தம் திருமகன் இயேசுவை உலகிற்கு அனுப்புகின்றார். இவ்விதமாக எல்லா மனிதர்களையும் சாவிலிருந்து வாழ்வுக்கும், இருளிலிருந்து ஒளிக்கும் பொய்ம்மையிலிருந்து மெய்ம்மைக்கும் இட்டுச்செல்ல இறைமகன் இயேசு மனுவுரு எடுத்த மாபெரும் நிகழ்வுதான் கிறிஸ்மஸ் பெருவிழா. மனிதர்களாகிய நாம் வாழ்வைப்பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு இயேசு இவ்வுலகிற்கு மனிதனாக அவதரித்தார் என்ற அருமையான கருத்தை புனித யோவான் தமது நற்செய்தியில் அழகுறப் படம் பிடித்துக் காட்டுகின்றார் (யோவா *10:1-21*). அதனையே புனித பவுலும் "எல்லா மனிதரும் மீட்புப் பெற வேண்டும்" (*1* திமோ *2:4*) வாழ்வின் நிறைவைப் பெறவேண்டும் என இரத்தினச் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

கிறிஸ்துவின் பிறப்பு நிகழ்வு இடம்பெற்று *2022* ஆண்டுகள் கடந்து விட்டன. "குழந்தைகள் பசியால் இறந்து கொண்டிருக்கும்போது, நாம் நிம்மதியாக தூங்கமுடியாது" என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். இத்தருணத்தில் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுவதில் அர்த்தம் உண்டா? அதுவும் எமது நாட்டின் இன்றைய அவல நிலையை ஆழமாகச் சிந்திக்கின்ற வேளையில் எமது கிறிஸ்மஸ் பிறப்பு விழா வேடிக்கையானதாக, போலி வேடம் பூண்டதாக உள்ளதை நினைக்கும் போது ஏளனமாக உள்ளது. இன்று எமது நாட்டைப் பொறுத்தளவில் பொருளாதாரச் சீரழிவின் உச்சகட்டத்தை அடைந்துள்ளது. இந்த நிலையை உருவாக்கிய காரணகர்த்தாக்களான ஆட்சியாளர்களும் அரச பரம்பரையினரும் ஏழை மக்களின் கூக்குரலை அலட்சியம் செய்துகொண்டு ஆடம்பர மாளிகைகளில் உண்டு உறங்கி மமதையில் வாழ்கின்றனர். உண்ண உணவின்றி பட்டினியில் கிடந்து இறக்கும் பிள்ளைகளின் தொகை தொடர்ந்து அதிகரிக்கும் அவலநிலை, அத்தியாவசியப் பொருட்களின் தொடர்ச்சியான விலையேற்றத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் சாதாரண குடும்பங்கள், பலவிதங்களில் பாதிப்புக்குள்ளாயிருக்கும் விவசாயிகள், மீனவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழிலாளர்கள், விசாரணைகளின்றி கைதிகளாக்கப்பட்டு சிறைகளில் வாடுபவர்கள் ஒட்டுமொத்தமாக பாதிக்கு மேற்பட்ட பிரஜைகள் இருள் சூழ்ந்த வாழ்வு வாழ்கின்றனர்.

இவ்வேளையில் நாம் கோலாகலமாக கிறிஸ்மஸ் விழாக் கொண்டாடுவதில் அர்த்தம் உண்டா? ஒரு குழந்தையின் பிறப்பு ஒரு குடும்பத்துக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதற்கும் மகிழ்ச்சியைக் கொண்டுவரும் விழாவாகும். இறைமகன் பிறப்பில் ஒரு புதிய ஒளி பிறந்துள்ளது. ஒரு புதிய நம்பிக்கை அருளப்பட்டுள்ளது. அவரது பிறப்பால் புதிய வானம் புதிய பூமியைப் படைக்க வல்லமை கிடைத்துள்ளது. வாழ்வைக் கொண்டாடுவோம். அதிலும் குறிப்பாக நம்மை மீட்க மனுவுருவான மீட்பரின் பிறப்பை அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாடுவோம். அகம் நோக்கிய விழிப்பு நிலையைப் பெறுவோம். நம் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் எல்லா மக்களையும் ஒன்றிணைக்கும் சக்தியாக, எல்லா மக்களுக்கும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாக அமையட்டும்.

**பகிர்வின் விழாவாகட்டும்:**

நமது கிறிஸ்மஸ் கொண்டாட்டம் பகிர்வின் விழாவாகட்டும். வீண் ஆடம்பரங்களுக்காய் நேரத்தையும் பணத்தையும் விரயம் செய்யாமல், செலவுகளைக் குறைத்து, புதிய ஆடை வாங்க பணம் இல்லாமல் தவிக்கும் அயல் வீட்டாருக்கு புத்தாடை வாங்கிக் கொடுக்கலாம். பல இலட்சங்களை குடில் கட்டுவதற்கும், தோரணங்கள் அலங்கார விளக்குகள் அமைப்பதற்கும், இன்னிசை கச்சேரிகளுக்கு செலவிடுவதற்கும் பதில் வீடற்ற ஒரு ஏழைக் குடும்பத்தைத் தெரிவு செய்து வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை பங்கு ரீதியில் செயல்படுத்தலாமே! புத்தாடை எடுக்கும் வேளையில் ஏழை ஒருவருக்கும் புதிய ஆடை ஒன்றினை வாங்கிப் பகிரலாமே!

இறுதியாக கிறிஸ்தவ வாழ்வு ஒரு விழாக் கொண்டாட்டம் அல்ல; மாறாக அது "நம்பிக்கையில் எழும் மகிழ்வு" என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். நம் கொண்டாட்டங்கள் நம்பிக்கையின் மகிழ்வை எத்தனை பேருக்கு ஊட்டப்போகிறது? சிந்தித்துச் செயல்படுவோம்.

இயேசு தமது பணி வாழ்வில் மூன்று விதமான மீட்புப் பணிகளை மேற்கொண்டார்.

1. உடல் சார்ந்த மீட்பு - பிறவிக் குருடனுக்குப் பார்வை அளித்தது.
2. உள்ளம் சார்ந்த மீட்பு - சக்கேயுவின் மனமாற்றம்
3. சமூகம் சார்ந்த மீட்பு - விபச்சாரப் பெண் மனம் மாறியது.

இவ்விதமாக முழுமனித மீட்புக்காக மனித உருவெடுத்து அவதரித்த இயேசு முழுமனித மீட்புக்காக தன்னுயிரை அளிக்க முன் வந்த வழி சிலுவைப் பலி. "பெறுவதிலும் தருவதே இன்பம்" என்ற கோட்பாட்டை வலியுறுத்தி வழிகாட்டிச் சென்றார். அவர் வழி செல்வோம்.

தானம், தர்மம், விருந்தோம்பல், அறம், கொடை, வழங்கல் என்பவை பிறருக்கு உதவுதல் என்ற ஒரு செயலிற்கான பல சொற்கள். பிறரின் தேவையறிந்து உதவுபவர் மனிதர். விருந்திற்கு அழைக்கும்போது யாரையெல்லாம் அழைக்க வேண்டும் என்று இயேசு சொல்கிறார். திருப்பிச் செய்ய இயலாத ஏழை, எளியவர்கள், ஊனமுற்றோர், பார்வையற்றோர் ஆகியோரை அழைக்க வேண்டும். அவர்களால் திருப்பி விருந்து படைக்க முடியாது. ஆனால் அதற்கான கைம்மாறு விண்ணகத் தந்தையால் வழங்கப்படும் என்கிறார் இயேசு. இதனையே திருவள்ளுவர்,

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"
(குறள் 86) என்கிறார்.

தேவையில் உள்ளவர்க்கு வழங்குவதே என "விருந்தோம்பல்" என்ற சொல்லின் மூல அர்த்தம் கொடுக்க வேண்டும். எதற்காகக் கொடுக்க வேண்டும்? கைம்மாறு கருதி அல்ல. மாறாக தேவையில் இருப்போருக்கு உதவுபவர் இறை இயல்பில் பங்கு கொள்கிறார். பிறர் வளர, வாழ உதவுகிறார். அத்தகையவர்கள் கடவுளுக்கு உகந்தவராகின்றனர். "முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்" (2 கொரி 9:7). அத்தகையவர்களைக் கடவுள் எல்லா நலன்களாலும் நிரப்புவார். எல்லா வகையிலும் செல்வந்தராகி வள்ளன்மை மிகுந்தவர்களாய் விளங்கச் செய்வார் (2 கொரி 9:8, 11).

**ஒளி விழா வாழ்த்துக்கள்!**

# இளையவனே உனக்காக...



அகவை அறுபதில் நின்று திரும்பிப் பார்க்கிறேன்... நான் கடந்து வந்த காலங்கள் இலவம் பஞ்சு மெத்தையல்ல; நெருஞ்சி முட்தடங்கள். இளமை, அது ஒரு வரம்; இரத்தம் சூடாக இருக்கும் காலம். “பயமா...? கிலோ என்ன விலை?” என்ற கேள்வி பிறக்கும். பட்டாம் பூச்சிகளாய் சிறகடித்து சிட்டுக் குருவிகள் போல் சுதந்திரமாய் பறந்து திரியும் காலம். உடலும் உள்ளமும் அதையே அவாவி நிற்கும்.

நண்பனின் வார்த்தைகள் வேதம். தந்தையின் கண்டிப்பு வெறுப்பு. ஆன்மீகம் கூட கேள்விக்குறி. நாத்திகம் பேச உதடுகள் துடிக்கும். இத்தனையையும் நானும் தாண்டி வந்தேன்.

இப்பொழுது இடறிச் செல்லும் கடிகார முட்கள் அப்போது வழுக்கிச் சென்றன. இன்றைய இளையோனே நெஞ்சினில் சிலுவையை தொங்க விடு. மாற்று மதத்தினர் காதிலும், கழுத்திலும் சிலுவையை தரிக்கிறார்கள். கேட்டால் ஒவ்வோர் காரணம். ஆனால் நம் வாழ்வின் விடியல் பூத்தது சிலுவையிலல்லவா? கடன்பட்டு வாழாதே. அவசரத்தில் முடிவுகளை எடுக்காதே. ஆத்திரத்தில் செயலில் இறங்காதே.

அழகில் மயங்கி மனையாளை மணக்காதே. கோடியொரு வெள்ளை. குமரியொரு பிள்ளை என்பார்கள்.

காரியத்தை சாதிக்க கண்ணை கசக்கும் பெண்ணை -

ஒப்பனைகளால் கற்பனையில் வாழும் பெண்ணை -

அரைகுறை ஆடைகளில் அங்கங்களை பந்தியிடும் பருவத்து மங்கையை, ஓங்கிச் சிரிப்பவள், நாணமில்லாத நங்கை இறை பக்தியில்லாத இளமகளிர் உன் வாழ்விற்கு வேண்டாதவர்கள். அன்பான மனைவி, அளவோடு காமம், உறவோடு வாழ்க்கை, உயர்வான எண்ணங்கள் வளமான வாழ்வின் அத்திவாரக் கற்கள்.

போதும் என்று சோம்பியிராதே; விடா முயற்சியுடன் போராடு; செய்யும் தொழிலை நேசி; அதில் நீ முன்னேறு. நேர்மையை மூலதனமாக்கு. அளந்து செலவு செய்; கஞ்சனாய் வாழாதே! உன்னை மற்றவர் நம்பும்படியாக நடந்துகொள்: நீ யாரையும் நம்பி ஏமாறாதே. ‘நம்ப நட நம்பி நடவாதே’ ஆன்றோர் வாக்கு. அதிகாலை எழு. அழுக்குப் போகக்குளி. ஆண்டவனை வழிபடு. பகல் முழுக்க பணி செய். வேளைக்கு உணவு உண். கவலைகளை களைந்து விடு. உனக்கான உலகம். உனக்கான வெளி பரந்து விரிந்து கிடக்கிறது. உன் ஆயுள் குடம் ஒழுகிக்கொண்டிருக்கிறது. வாழக் கிடைத்த ஒவ்வொரு வினாடியும் மகிழ்ச்சியாக வாழ். வாழ்க்கை வாழ்வதற்கே. இளையவனே இவையே உனக்கு நான் கூறக்கூடிய யதார்த்த வாழ்வியல்.

■ *பிரியமுடன் பைந்தமிழ்க்குமரன்.*

---

“அநேக மனிதர்கள் எதிலும் தோல்வியடைவதில்லை. காரணம் அவர்கள் எதைச் செய்யவும் முயல்வதே இல்லை”

– கோபிநாத் பார்சுவா

“மனிதன் தன் பையை பணத்தால் நிரப்புவதோடு, நேர்மையாலும் இதயத்தை நிரப்ப வேண்டும்”

– போலந்து நாட்டு பொன்மொழி



# அருளொளி பாய்ச்சும் சுடர்!

■ அருட்பாவலர் நிலா தமிழின்தாசன்



மலர் மஞ்சம் கிடையாது உலகாளுந் தேவன்
உலர் வைக்கோற் குவியலுக்குள் வந்துதித்த கோலம்
நிலம் வாழும் நிஜமாந்தர் நெஞ்சமதை வாட்டும்
நித்தமிறை பாலகனின் புகழ்பாடி வாழ்த்தும்.

இடர் புரியு மேரோதின் படை தேடி அலையும்
இதய மதிற் கசிவின்றிக் கொலை கோடி புரியும்
அடையாளந் தெரியாமல் அகப்பட்ட தளிர்கள்
ஆண்மகவு என்றவுடன் அவர்தலையை அரியும்.

மானிடத்தின் மனத்திருளை மாற்றி உலகெங்கும்
மாட்சியுட னாட்சி செய்ய வந்ததித்த செங்கோல்
வானகத்தின் இளங்கதிரும், வண்ணநிலா, உடுக்கள்
வாழ்ந்திடவே வைக்கோலில் ஞானமகன் பிறந்தார்.

வெத்தலையில் வந்துதித்தா ரித்தரையின் மீட்பர்
விடியலினி உறுதியெனப் புகழ்ப்பாடும் புட்கள்
சத்தியத்தின் வடிவமிவர் சாந்தத்தின் ஊற்று
சகத் திருளை நீக்கி ஒளி வெள்ளமென மாற்றும்.

உலகெங்கும் போர் வெடியி னோசை யுயிர் கருகும்
உண்மை யறிவுடைய வர்க்குத் துயர், கண்ணீர்பெருகும்
கலகங்கள் செய்தழிவைத் தருகின்ற மாக்கள்
கண் திறக்கப் புனிதச் சுடர் அருளொளியைப் பாய்ச்சும்.

அகதியென அநுதினமு மலைந்துலையும் மக்கள்
அடிமை நிலை மாற்றி யொளி கண்டிடவே வைக்கும்
செகசோதி மரிபாலன் பதமலரைத் தொழுவோம்
சிந்தை தனில் ஒளிபெற்றுப் புத்துயிர்ப்புக் கொள்வோம்.

## நோய் தீர்க்கும் மூச்சுப்பயிற்சி



நாம் சுவாசிக்கும் காற்று நம் உடல் மற்றும் மனநலனில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. மூக்கின் வழியே நாம் உள்ளிழுக்கும் காற்று முறையாக செய்யப்படும்போது மூச்சுப்பயிற்சியாக மாறி, நம் உடலுக்கு ஏராளமான நன்மைகளைத் தருகின்றது. முறையாயான காலஅளவில் செய்யப்படும் மூச்சுப்பயிற்சியின் போது, வாயில் சுரக்கும் உமிழ்நீரில் நிறைய புரதங்கள் இருக்கின்றன என்று அறிவியல் ஆராய்ச்சிகள் கூறுகின்றன. நம் மனம் மற்றும் உடல் ரீதியான செயற்பாடுகளுக்கு இன்றியமையாததாகத் திகழும் இப்புரதங்கள் நரம்பு வளர்ச்சிக்குக் காரணியாகவும், உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியைத் தூண்டுவதிலும், புற்றுநோய் உருவாவதைத் தடுப்பதிலும் துணைபுரிகின்றன.

இப்புரதங்கள் அதிகரிக்கும் பொழுது, நோய்க்கிருமிகள் உடலினுள் நுழையும் முக்கிய வாயில்களான நாசி, வாய், மூச்சுக்குழாய் மற்றும் உணவுக் குழாய்களில் உள்ள கிருமிகள் அழிக்கப்பட்டு, உடலில் நோய் எதிர்ப்பு ஆற்றலைப் பெருக்குகின்றன. மேலும் இன்றைய கோவிட் நுண்கிருமித்தொற்று நோய் போன்றவற்றையும் சமாளிக்கும் திறன் கொண்டவையாக இப்புரதங்கள் இருப்பதாக அண்மை ஆராய்ச்சிகளும் உறுதி செய்கின்றன.



"மன்னிப்பதென்பது கிறிஸ்தவப் பண்பு. கிறிஸ்துவின் சிலுவை மரணமே இதற்கு உதாரணம். ஆனால் அதையே தமது ஆயுதமாகக் கொண்டு தவறிழைப்போர் தப்பித்துவிட முடியாது. குண்டு வெடிப்பினால் பாதிக்கப்பட்டோர் நீதியின்றிப் போராடிக்கொண்டிருக்க, தவறிழைத்தோர் நீதியிலிருந்தும் பொறுப்புக் கூறலிலிருந்தும் தப்பித்துவிட முடியாது. ஒரு குற்றம் இழைக்கப்பட்டால் பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிடைக்க வேண்டும். ஏற்ற நஷ்டஈடும் கிடைக்க வேண்டும். அதேவேளை நீதி விசாரணை நடைபெற்று தவறிழைத்தோருக்குத் தக்க தண்டனையும் கிடைத்தால் அதுபோன்ற நாசகாரச் செயல்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்கலாம்...."

# உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்:

## பாதிக்கப்பட்டோரின் உறவுகள் வத்திக்கான் பயணம்

– நேர்கண்டவர்: எஸ் ஜோன்ராஜன்

(02.10.2022 ஞாயிறு வீரகேசரி)

இவ்வாறு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் கிறிஸ்டியன் இம்மானுவல் ஆண்டகை தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் சிக்கி உயிரிழந்தோரின் குடும்ப உறவுகளுடன் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் வத்திக்கான் சென்று பரிசுத்த பாப்பரசரைச் சந்தித்த குழுவினருடன், கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திச் சென்று திரும்பிய திருகோணமலை மறைமாவட்ட ஆயர், இது விடயத்தில் நியாயம் கோரும் பாதிக்கப்பட்ட உறவுகளுடன் இணைந்து பயணிப்பதாகவும், துரிதமாக உரியவர்களுடன் தொடர்பு கொண்டு ஏற்ற நடவடிக்கையை எடுப்பதற்கு பாப்பரசர் வாக்குறுதியளித்ததாகவும், ஒவ்வொரு வருடனும் கைகுலுக்கி அளவளாவி ஆறுதல் படுத்தியதோடு புனித பேதுரு பேராலயத்தில் அவர்களுடன் இணைந்து திருப்பலியையும் ஒப்புக்கொடுத்ததாகவும் மேலும் கூறினார்.

இது தொடர்பில் அவர் வழங்கிய பேட்டி வருமாறு:

**கேள்வி: வத்திக்கான் சென்று பரிசுத்த பாப்பரசரைச் சந்தித்த கர்தினால் குழுவில் தாங்களும் ஒருவராக கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி யிருந்தீர்கள். அந்த அனுபவம் எப்படியிருந்தது?**

**பதில்:** இது ஒரு பாரிய திட்டமாகக் கொழும்பு உயர் மறை மாவட்டப் பேராயரால் முன்னெடுக்கப்பட்டது. கொழும்பில் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட தேவாலயங்களைச் சேர்ந்த குருக்களுடன் இணைந்து இத்திட்டத்தை வகுத்திருந்தார். நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களோடு பயணிப்பதும் அனுபவப் பகிர்வும் ஒரு வித்தியாசமான அனுபவமே! இதில் மட்டக்களப்பு மறைமாவட்ட சீயோன் தேவாலயத்தில் நடந்த குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களினதும் படுகாயமுற்றவர்களினதும் குடும்ப உறவுகளும் கலந்துகொண்டதும் இப்பயணத்தில் நானும் இணைய ஒரு முக்கிய காரணம். எனவே இப்பயணத்தின்போது எனக்குக் கிடைத்த வாய்ப்பினை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டேன்.

**கேள்வி: வத்திக்கான் பேராலயத்தில் பாப்பரசர் தலைமையில் திருப்பலி ஆராதனையை மும்மொழிகளிலும் நடத்தியதை பார்க்கவும் கேட்கவும் அரிய காட்சியாகவும் பக்திப் பரவசமாகவும் இருந்தது. இவ்வாறு உலக மயப்படுத்துவதால் என்ன பயன் கிடைக்குமென்று கருதுகிறீர்கள்?**

**பதில்:** பாதிக்கப்பட்டவர்களோடு வத்திக்கானில் திருப்பலியில் பங்கு பற்றுவதென்பது மிகவும் முக்கியமானது. வத்திக்கானில் நடைபெறும் விசேட நிகழ்வுகள் உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்றடையும் என்பது தெளிவு. குண்டுவெடிப்பு பற்றிய செய்திகளை உலக நாடுகள் அறிந்திருந்தாலும், அந்நாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் இவர்களை நேரடியாகவே சந்தித்து நடைபெற்ற அனர்த்தங்களை தெளிவாகவே அறிந்துகொள்ள முடிந்தது.



**கேள்வி:** மேற்படி தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் தாராள நிதியுதவி வழங்குவதாக அப்போதைய நல்லாட்சி அரசாங்கம் அறிவித்து, அவ்விதமே செய்ததே? அதன்பிறகும் நீதி விசாரணை நடத்தக் கோருவதால் விளையப்போவது என்ன?

**பதில்:** தாராளமான நிதியுதவி வழங்குவதால் ஒருவர் நீதியிலிருந்து தப்பித்துவிட முடியாது. அப்படியானால் பணம் படைத்தவர்கள் எந்தக் குற்றங்களையும் செய்துவிட்டு பணப் பலத்தினாலோ நீதி விசாரணைகளிலிருந்து தப்பித்துவிட முடியுமா? பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்ட ஈடுகளில் முதன்மையானது குற்றம் செய்தோருக்கான நீதி விசாரணையும் தண்டனையுமாகும்.

**கேள்வி:** இக்கோரிக்கை விடயத்தில் பாப்பரசரின் நிலைப்பாடும் வாக்குறுதியும் என்ன?

**பதில்:** பாதிக்கப்பட்டோருடனும், அவர்களுக்காகக் குரல் கொடுத்துப் போராடும் கர்தினால் ஆண்டகை மற்றும் ஆயர்கள், அருட்தந்தையர்களுடனும் தாம் இணைந்து பயணிப்பதாகவும், நீதி நிலைபெறவும், பாதிக்கப்பட்டவர்களை தேற்றவும் தம்மால் முடிந்த உதவிகளைச் செய்வதாகவும் அவர் வாக்களித்தார். அதன் ஒரு கட்டமாகவே அண்மையில் அவரால் வழங்கப்பட்ட பொருளுதவிகள் கொச்சிக்கடை தேவாலயத்தில் வைத்து கர்தினால் ஆண்டகையால் பாதிப்புற்ற குடும்ப உறவுகளுக்கு வழங்கப்பட்டமை யாவரும் அறிந்ததே.

**கேள்வி:** மன்னிப்பை முழக்கமிடுதல் என்பது திருச்சபையின் விருதுவாக்கியம்! இந்த விடயத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமானவர்களை கண்டறிந்து தண்டனை பெற்றுக் கொடுக்க முன்னிற் பது முரணாகத் தெரிகிறதே:

**பதில்:** மன்னிப்பென்பது கிறிஸ்தவப் பண்பு. ஆனால் அதையே தமது ஆயுதமாகக் கொண்டு தவறிழைப்போர் தப்பித்துவிட முடியாது. குண்டு வெடிப்பினால் பாதிக் கப்பட்டோர் நீதியின்றி போராடிக் கொண்டிருக்க, தவறிழைத்தோர் நீதியிலிருந்தும் பொறுப்புக் கூறலிலிருந்தும் தப்பித்துவிட முடியாது. ஒரு குற்றம் இழைக்கப்பட்டால் பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிடைக்க வேண்டும். அதேவேளை உரிய நீதி விசாரணை நடைபெற்று தவறிழைத்தோருக்கு தண்டனையும் கிடைத்தால் அதுபோன்ற பாதகச் செயல்கள் எதிர்காலத்தில் நடக்காமல் தடுக்கலாம்.

**கேள்வி:** “மனம் திருந்துங்கள்” என கர்தினால் ஆண்டகை வத்திக்கானில் பொது ஆராதனையின்போது கோரிக்கை விடுக்கிறார். இங்கேயும் அதையே கோரினார். மனம் திருந்துதல் என்றால் தவறையுணர்ந்து, அவற்றை அறிக்கையிட்டு மன்னிப்புக் கோருவது! இதையா உயிரிழந்தவர்களின் உறவுகள் எதிர்பார்க்கிறார்கள்? தங்கள் குற்றங்களை வரிசைப்படுத்தி அறிக்கையிடுங்கள் என்றல்லவா அவர் கேட்டிருக்க வேண்டும்.

**பதில்:** மனம் திருந்துதல் என்பது தவறையுணர்வதை மட்டுமே குறிப்பதாகாது. மனம் திரும்புவது போல மனம் திருந்துவதும் ஒரு பொதுவான சொல். அந்தந்த சூழ்நிலைக்கேற்ப அவற்றுக்கு ஒவ்வொரு விளக்கம் கொடுக்கலாம். குண்டு வெடிப்புக்கு காரணமானவர்கள் தங்கள் தவறையுணர்ந்து அறிக்கையிட வேண்டும். நாட்டுச் சட்டம் அல்லது சர்வதேச சட்டம் அவர்களுக்குரிய தண்டனையை வழங்கும். மன்னிப்புக் கேட்டால் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிடலாம் என்று எண்ணுவது அர்த்தமற்றது.

**கேள்வி:** இதே கர்தினால் ஈழ இறுதிப் போரில் வாயையே திறக்கவில்லையென்ற குற்றச்சாட்டும் தமிழர்கள் மத்தியில் உள்ளதே?

**பதில்:** யுத்த காலத்தில் கர்தினால் அப்போது கண்டி மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயராயிருந்த

– 17ம் பக். பார்க்க




நத்தார் விடுமுறைக்காக அன்ரனின் தங்கை குடும்பத்தார் அன்ரனின் வீட்டுக்கு வந்திருந்தார்கள். தங்கையின் கணவர் அவரது பிள்ளைகள் மூவர் - பையன்கள் - வருகை தந்திருந்தார்கள். கொரோனா காலம் காரணமாக கொழும்பை விட்டு இரண்டு வருடங்களாக வெளியேறவில்லை. இலவச புகையிரத ஆணைச்சீட்டுகள் காலாவதியாகிவிடும் என்ற காரணத்தாலும் பாட்டியைப் பார்க்க வேண்டும் என்ற நோக்கத்தாலும் ஒரு மாற்றம் தேவை என்பதாலும் 'ஒரு பலநோக்குத் திட்ட விஜயமாகத்தான் அவர்கள் மட்டக்களப்பு வந்திருந்தார்கள்.

அன்ரனின் கடைசிப் பிள்ளைகள் இருவரும் தங்கையின் பிள்ளைகளும் பின்னேரம் விளையாடி முடித்துவிட்டு வியர்வை வடிய வடிய மாமரத்தின் கீழ் வெண்மணலில் அமர்ந்திருந்து உரையாடிக்கொண்டிருந்தனர். பூட்டப் பிள்ளைகளின் பக்கத்தில் அன்ரனின் அப்பம்மாவும் பாயொன்றை விரித்து காலை நீட்டி அமர்ந்திருந்தார்.

கிரிக்கட் பற்றியும் இலங்கை வீரரின் 'கெட்டித்தன காரியம்'' பற்றியும் கதைத்து முடித்த அவர்கள், பூட்டியை வம்பிழுக்கும் காரியத்தில் இறங்கினர்.

'இந்தக் காலத்தில் இயேசு நம்ம ஊரில் பிறந்திருந்தால் எப்படியான இடத்தில் பிறந்திருப்பார்....?'' என்றான் ஒரு பயல். பூட்டி காதைத் தீட்டிக் கொண்டாள்.

"ஒரு தென்னோலை குடிசையில்தான் பிறந்திருப்பார். மட்டக்களப்பில குகைகள் இல்லதானே...?'' என்றான் இன்னொருவன்.

"எப்படி பிரசங்கம் பண்ணியிருப்பார்....?'' என்று கேட்டான் அன்ரனின் மகன்.

"பெரிய மேடைபோட்டு நிறைய ஸ்பீக்கர்கள் வைத்து பிரசங்கம் பண்ணியிருப்பார்....'' என்றான் மற்றவன்.

பூட்டி மெல்ல மெல்ல இறுக்கமடைந்து கொண்டிருந்தாள்.

"இல்லடா .... ரிவியில நேரடி ஒளி பரப்புச் செய்திருப்பார்...''

பூட்டி பொறுமையிழந்துவிட்டார்.

"அடிப்பாவிப் பிள்ளைகளே....! ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்றீங்க.... நகரத்துக்குத்தான் போவீங்க....''

என்று அவளது பலவீனமான குரலில் சத்தமிட்டாள். அன்பான, அடக்கமான, பொறுமையான பூட்டியை வேண்டுமென்றே தூண்டிவிட்டு புதினம் பார்த்துவிட்டார்கள் பிள்ளைகள்.

"சொறி பூட்டி...''

என்று சொல்லிக்கொண்டு பூட்டியைக் கட்டிப்பிடித்து மாறி மாறி கொஞ்சினார்கள். பூட்டியும் அப்போது மனம் விட்டு சிரிக்கத் தொடங்கினார்.

தலைமுறை இடைவெளி தகர்க்கப்பட்டுக்கொண்டிருந்தது. ⚜

முன்னின்று புகழ்பவனும், பின்னாலிருந்து கிண்டி விடுபவனும் ஒரே தன்மையினர்தான்.

⚜

*பகலும் இரவும், மாலையும் காலையும், பனிக்காலமும் திரும்பித் திரும்பி வந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு காலம் விளையாடுகிறது. வயது கழிகிறது. என்றாலும் காற்றுபோல் வியாபித் திருக்கும் ஆசை மட்டும் மனிதனை விடுவதில்லை.*

⚜

பிரார்த்தனை நமது கடவுள் நம்பிக்கையை சக்தி வாய்ந்ததாகச் செய்கிறது.



கிறிஸ்தவம்

கனாத உசீதரம்

# மாணவர் பக்கம்

மாதிரி வினாத்தாள் - பகுதி - 1

- நில்மினி கஜேந்திரன்

தொடர் XIII

**மாணவர் பக்கம்**

ஓகஸ்ட் – செப்டெம்பர் – ஒக்டோபர் – 2022

விடைகள்

1) 4 5) 4 9) 2
2) 3 6) 5 10) 1
3) 3 7) 3
4) 2 8) 3

**1. எரேமியா என்பதன் பொருள் யாது?**

1. இறை அன்புவன் உயர்த்தினார் 2. இறைவன் மீட்கிறார்
3. இறைவன் பார்த்துக்கொள்வார் 4. இறைவன் காப்பாற்றுவார்
5. இறைவன் வல்லவர்

**2. எரேமியா இறைவாக்கினர் தம் தூதுப்பணியை செயல்படுத்தியது.**

1. அடிமைத்தனத்தில் 2. விடுதலையாகிய பின்பு
3. துன்பங்களுக்கூடாக 4. புதிய உடன்படிக்கையில்
5. பபிலோனியாவுக்கு நாடு கடத்தப்படுவதற்கு முன்பு

**3. கி.மு. 597ல் நெபுக்கத்நேசரினால் நாடுகடத்தப்பட்டு பபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள் யாவர்?**

1. மக்களும், அரசர்களும் 2. மக்களும் அவர்களின் அடிமைகளும்
3. ஏழைகளும், கைம்பெண்களும் 4. பெண்களும், சிறுவர்களும்
5. யோவாக்கீம் அரசரும், எசேக்கியலுடன் 10000 பேரும்

**4. குருக்கள் குலத்தைச் சேர்ந்த எசேக்கியேல் யாருடைய மகன்?**

1. எபிரேயரின் 2. பூசியின் 3. அமட்சியாவின்
4. எலியின் 5. யோவாக்கீனின்

**5. காட்சிகள், உவமை, அடையாளங்கள் மூலம் இறைவாக்கு உரைத்தவர்**

1. எசாயா 2. யோவேல் 3. எசேக்கியேல் 4. எரேமியா 5. செப்பனியா

**6. இறைவன் புதுமையான விதத்தில் தம் மக்களுக்குக் கொடுக்கும் புதிய வாழ்வினை மனம் கவரும் விதத்தில் எடுத்துக்காட்ட எசேக்கியேல் பயன்படுத்திய அடையாளம்:**

1. புதுப்பானை 2. வளைந்த நாணல் 3. உலர்ந்த எலும்புக்கூடு
4. புதிய தளிர் 5. வெண்புறா

**7. எருசலேமிலிருந்து 18 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கிராமம் எது?**

1. எருசலேம் 2. பெத்லகேம் 3. தெகோவா 4. யூதா 5. சமாரியா

**8. ஆமோஸ் இறைவாக்கினரின் செய்தியில் இலக்கு ஏன் வடஅரசை நோக்கியதாய் இருந்தது?**

1. அங்கு சிறந்த வாணிபத் தலங்கள் அமைந்திருந்ததால்
2. விளையாட்டிற்கு பேர் போன இடமாய் இருந்ததால்
3. இறைவன் மீட்ட மக்கள் அங்கு வசித்தமையால்
4. உயர்ந்த சமூகமொன்று ஏழை எளிய மக்களை சுரண்டி வாழ்ந்ததால்
5. அதிகளவான பாவிகள் நிறைந்திருந்தமையால்

**9. சமாரியப் பெண்களை எவற்றுடன் ஒப்பிட்டு ஆமோஸ் இறைவாக்கினர் அடையாளப்படுத்தி இறைவாக்குரைத்தார்?**

1. பசுமையான நிலத்திற்கு 2. பகுத்தறிவான பெண்களுக்கு
3. கொழுத்த பசு மாட்டிற்கு 4. சந்திரனுக்கு 5. சாதனை படைக்கும் பெண்களுக்கு

**10. வட அரசில் ஆகியோரின் சம காலத்தவராய் குறிப்பிடப்படும் இறைவாக்கினர் யார்?**

1. ஆபகூக் 2. நாகூம் 3. ஓசேயா 4. செப்பனியா 5. யோவேல்



# ஒரு வெண்மணற் கிராமம்
## காத்துக்கொண்டிருக்கிறது






**அத்தியாயம் 9**

குட்டிக்கரச்சைப் பள்ளி வாசலிலிருந்து வாங்குச் சத்தம் கேட்ட போது தாமோதரம் விழித்துக் கொண்டான்.

தலைமாட்டிலிருந்த அரிக்கன் விளக்கின் திரியைத்தூண்டி மண்டபத்தை வெளிச்சமாக்கிய பின் பாயைச் சுருட்டித் தலையணையையும் விரிப்பையும் பாயின் மேல் வைத்து விட்டு முற்றத் துக்கு வந்தான். முற்றத்து மாமரத்தின் கீழே அப்பா படுத்திருந்த சாக்குக் கட்டிலில், சிங்கப்பூர் பாய் தலையணையோடு சுருட்டப்பட்டுத் தலைமாட்டில் வைக்கப்பட்டிருந்தது. தந்தையார் எழுந்து சென்றிருக் கிறார் என்று தெரிந்து கொண்ட தாமோதரம் 'அவர் எங்கே போயிருப்பார்? இன்றைக்குப் பால் கொண்டு வரப் போவதில்லை என்று நேற்றே அம்மாவிடம் சொல்லியிருந்தாரே. பாற்குடங்களையும் நேற்றுச் சாயந்தரமே தம்பையா அண்ணன் கொண்டு போய் விட்டாரே. அப்படியானால் அதிகாலையில் அப்பா எங்கே போனார்?' என்று தன்னுள்ளே கேள்விகளை எழுப்பிக் கொண்டு. காலைக் குளிரையும் பொருட் படுத்தாதவனாக வேலியோரம் சென்று வேப்பங் கன்றிற் குச்சியை முறித்துக்கடித்துத் துப்பிக் கொண்டு பல் விளக்கத் தொடங்கினான்.

அடுக்களையைக் கடந்து செல்கையில் "அப்பு எங்கம்மா?" என்று கேட்டான்.

"இங்கினதான் நிண்டார். வெளிக்குப் போயிற்றார் போல" என்று அம்மா பதில் கொடுத்தாள்.

தாமோதரம் கிணற்றடிக்குச் சென்று கிணற்றுக்கட்டில் துவாயைப் போட்டுவிட்டுச் சாரத் தோடு நின்று முழுகத் தொடங்கினான். கிணற்றுக்குத் துலா இருந்தது. ஆனாலும் அவன் கைவாளியினாற் தான் அள்ளி முழுகினான். அவனுக்கு நெல்லியடிக் கிணறுகள் ஞாபகத்துக்கு வந்தன.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னே அவன் பாடசாலையிற் சேர்வதற்காகச் சின்னத்தம்பி வாத்தி யாரோடு நெல்லியடி போய்ச் சேர்ந்தபோது பிற்பகல் 3 மணி இருக்கும். போய்ச் சேர்ந்ததும்

குளிக்க வேண்டும்போல இருந்தது அவனுக்கு. தானாகவே கிணற்றடிக்குச் சென்றான். கிணற்றை எட்டிப் பார்த்தான். அவனுக்ககு நெஞ்சு பகீர் என்றது! இத்தனை ஆழமான கிணற்றிலிருந்து எப்படித் தண்ணீர் அள்ளிக் குளிப்பது? துலாவைப் பார்த்தான். நீள்சதுரக் கற்தூண்களில், அச்சுலக்கை யைப் புகுத்திய ஒரு முழுப்பனைமரமே துலாவாக இருந்தது. துலாவின் அந்தத்திற் கட்டிய பனை நார்க்கயிற்றில் வாளி தொங்கிக் கொண்டிருந்தது. அந்த நார்க் கயிறுதான் துலாக் கொடிபோலும்! இத்தனை ஆழமான கிணற்றில், இந்த முழுப்பனை மரத்தை இழுத்து நீர் அள்ளுவதை எண்ணியபோது அவனுக்குத் தலைவிறைத்தது.

கிணற்றடிக்கு வந்த ஆசிரியர் அவன் மலைத்து நிற்பதைக் கண்டு, தானே துலாவைத் தாழ்த்தி கிணற்றடியில் இருந்த பெரிய வாளியிற் தண்ணீர் ஊற்றி "இப்போ பருமட்டா மேலைக்கழுவும். பின்னேரம் தம்பி வீட்ட போய்க்குளிக்கலாம். அங்க மோட்டரும் பைப்பும் இருக்கு'

மாலையில் ஆசிரியர் அவனைத் தன் தம்பியின் வீட்டிற்குக் கூட்டிச் சென்றார். செட்டிதரை என்ற பிராந்தியத்தில் உள்ள அவர் தம்பி வீட்டுக் கிணறு முன்னர் பார்த்த கிணற்றைவிட ஆழமாக இருந்தது. எட்டிப் பார்த்தால் தண்ணீர் இருப்பதே தெரியாத அளவுக்கு அத்தனை ஆழம்? இந்தப் பாதாளத் தண்ணீரை இறைத்தல்லவா யாழ்ப்பாண விவசாயி பயிர் செய்கிறான்' என்று எண்ணிக் கொண்டே ஐந்தடி ஆழத்திலிருந்த தண்ணீரைக் கைவாளியால் மொண்டு தலையில் ஊற்றி ஊற்றித் தன் குளியலை முடித்துக் கொண்டான்.

வீட்டினுட் சென்று சலவை செய்த வேட்டியை உடுத்துச் சட்டையும் தரித்த பின்னர் திருநீறுபூசிக் கொண்டிருக்கையிற் தேநீரை நீட்டிய அம்மா, "ஏன் தம்பி சாப்பிட்டிற்றுப் போவன்" என்றாள். "இப்ப போறன், அரைமணித்தியாலத்தில் போய்ச் சேர்ந்திருவன். அங்க போய்ச் சாப்பிடலாம்" என்று விட்டு மாமரத்தைக் கடந்து தெருப்படலையைத் திறந்து வெளியேறினான். மாமனாரின் வீட்டு முற்றத்திலே அபிராமி பெருக்கிக்கெண்டு நின்றாள். "சைக்கிளைக் கொஞ்சம் தாங்க மாமி" என்று தாமோதரம் கேட்டபோதுதான் அவள் நிமிர்ந்தாள்.

"மண்டபத்துக்குள்ளதான் இருக்கு" போய் எடுங்க என்ற அபிராமி, "ஏன் தம்பி எங்க போகப் போறீங்க' என்றுகேட்டாள்.

சைக்கிளை உருட்டிக்கொண்டு மண்டபத் துக்கு வெளியே வந்தவன் "தம்பலகாமம் போப் போறன்" என்று விடையளிக்கையில் அறைக் குள்ளிருந்து சௌந்தரமும் வந்தாள். அவளைப் பார்த்தபோது தன் உடன் மாணவன் பொன்னம்பலத் தின் 'கொமென்ற்' ஞாபகத்துக்கு வந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை, மாணவர்கள் சிலரோடு சேர்ந்து அவன் பருத்தித்துறைப் பட்டினத் திற்குச் சென்றான். சந்தையைத் தாண்டிக் கடற்கரைப் பக்கமாகத் தொண்டமானாற்று வீதியாற் சென்று கொண்டிருக்கையில் எதிரே மெதடிஸ்த பெண்கள் கல்லூரி விடுதி மாணவிகள் தங்கள் மேற்றன் சகிதம் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களைக் கடந்து முடிந்ததும் 'பின்னால மூன்றாவது அணியில இடதுபக்கமாப் போற பெட்டை அரபிக் குதிரைமாதிரி அழகான பெட்டை மச்சான்' என்று கொமென்ற் சொன்னான். அதைக்கேட்டுத்தான் பொன்னம்பலம் சொன்னான் "பெட்டை வடிவா வடிவில்லியா என்று இப்படி நேரத்தில சொல்லேலாது வெளிக் கிடக்குள்ள எல்லாரும் மேக்கப் பண்ணிக் கொண்டு தான் வருவினம். உண்மையா அழகுதானா என்பதைக் கண்டுபிடிக்க ஒரு பெட்டை விடிஞ்சி படுக்கையால எழும்பின உடனதான் பார்க்கவேணும்"

அவனது விமர்சன நோக்கோடுதான் தாமோதரம் சௌந்தரத்தைப் பார்த்தான். அந்த அதிகாலையிற் கூம்பிய இதழ்களை ஒவ்வொன்றாக விரிக்கும் செந்தாமரையைப் போலச் சௌந்தரம் அழகாகத்தான் இருந்தாள்.

"நேற்று இதைப்பற்றி ஒன்றும் சொல்ல வில்லையே அத்தான்"

"நேற்று இரவுதான் தீர்மானிச்சன்" என்ற தாமோதரம் "மாமாட்ட என்ன மாமி சொல்ல?" என்று கேட்டான்? ஆனால் நேற்று இரவுதான் தீர்மானிச்சன்" என்றதைக் கேட்டதும் சௌந்தரத்தின் முகம் சாம்பிற்று. முகத்தைத் தொங்கவிட்டபடியே அறைக்குட் சென்றாள்.

"மாமாட்டச் சொல்றதுக்கு விசேஷமா ஏதும் இல்ல," என்று அபிராமி சொல்லிக் கொண்டி

ருக்கையில் தாமோதரம் சைக்கிளை உருட்டிக் கொண்டு வெளியேறி விட்டான். பின் சக்கரத்திற்குச் காற்றுப் போதாதுபோல இருந்தது. ஆனால் வேலும் மயிலும் கடை அதிகாலையிலே திறந்திருந் தது. அங்கே சென்று காற்றடித்துக் கொண்டு குட்டிக்கரச்சுப் பக்கமாகச் சைக்கிளை மிதித்தான்.

அவன் சென்று கொண்டிருக்கையில். "இவர் ஏன் தம்பலகாமம் போகிறார்? அதுவும் இரவுதான் அங்கு போவதெனத் தீர்மானித்தாராம்! சென்ற இரவு முழுக்கவும் நான் அவரையே நினைத்து நினைத்து இன்பக்கனவு கண்டு கொண்டி ருக்கையில், அவர் மட்டும் என்னை நினைக்க வில்லையா? திடீரெனத் தம்பலகாமத்து நினைவு அவருக்கு ஏன் வந்தது? அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அழ வேண்டும் போல இருந்தது கண்கள் கலங்கியே விட்டன. அவர் அதற்காகத்தான் போகிறார். திருக்கோணமலை சண்முகவித்தியாலயத்தில் போடிங்கில படிக்கிற மனோன் அக்கா இன்றைக்குத் தம்பலகாமம் வந்திருப்பா அவளைப் பார்க்கத்தான் அவர் போயி ருக்கிறார்....

சென்ற ஆண்டு மனோனும் எங்களோடு கூடத் திருவிழாக் கடைத் தெருவெல்லாம் சுற்றினாள். அவள் எவ்வளவு ஆனந்தமாக அவருடன் சிரித்துப் பேசிக்கொண்டு போனாள்? எனக்கு அப்பவே சந்தேகம். நான் பள்ளிக்குப் போகல்ல என்று அவர் கோபிப்பதற்கு இப்பதான் காரணம் தெரியுது. இல்லாட்டா எவருக்கும் சொல்லாம இப்படி அமுசடக்காத் தம்பலகாமம் போவாரா? படுக்கையிற் கிடந்தபடி சௌந்தரம் இப்படி என்னென்னவெல்லாமோ எண்ணினாள். மனோனுக்கு அவருக்குமிடையில் ஏதோ இருக்க வேண்டும். சில வேளை அவளைத் தான்.... நினைவுகளின் அகோரத்தில் சௌந்தரத்திற்கு அழுகையே வந்து விட்டது.

"ஏன் புள்ள காலையில் ஒரு வேலையும் இல்லியா? சும்மா படுக்கிறா? மாமி வீட்ட போகல்லியா? மனுஷி இருபது முட்டிப்பாலையும் காய்ச்சிப் பேணியில ஊத்தத் தட்டத்தனிய அவதிப்படப் போவுது' என்றாள் அபிராமி.

'எனக்குப் போகேலா' என்று வெறுப்புடன். ஆனால் எவருக்கும் கேட்காதபடி தனக்குத்தானே சொல்லிக் கொண்டே சௌந்தரம் கிணற்றடிப் பக்கம் போனாள்.

அன்று அவள் தனது கானல் வாழை களுக்கும். குரோட்டன்களுக்கும் தண்ணீர் ஊற்ற வில்லை. கோழிகளுக்குத் தீன் வைக்கவில்லை. வேறு எந்த வேலையுமே செய்யாமல் கிணற்றடியில் அசமந்து நின்றாள். கிணற்றடியிலே முதுகுத்தோலை உரித்து விடுவது போலச் சுள்ளென்றடிக்கும் காலை வெய்யில்கூட அவளுக்கு உறைக்கவில்லை.

சௌந்தரம் இப்படிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் தாமோதரம் குட்டிக்கரச்சிப் பாடசாலைக்குச் சமீபமாக, கிண்ணியாக்குடா உள்வாங்கிச் செல்லும் ஓடையின் விண்ணாங்கடிப் பரவலை வள்ளத்திலேறிக் கடந்து காக்காமுனை யைத் தாண்டிக் குறிஞ்சாக்கேணிச் சந்தியடிக்கு வந்த போது சூரியன் முதுகுப் பக்கமாகத் தீய்த்துக் கொண்டிருந்தான். சந்திக்கப்பாலிருந்த கரச்சையில் முழங்காலளவு நீரில் நின்று கொண்டு கைவலையை வீசி மீன்பிடித்துக் கொண்டிருந்த முஸ்லிம்களின் அரையிலிருந்த 'சிறுவால்'களின் (பொத்தானோ, பக்கிள்சோ, இல்லாத அரைக்காற்சட்டை) மேற் கட்டப்பட்டிருந்த பிரம்புப் பறிகளில் கயல் மீன்கள் துள்ளித் துடித்துக் கொண்டிருந்தன. பெருவெள்ளத் தின்போது, தம்யதாஸ்தானத்தைவிட்டுக் கிளம்பிவிட்ட கற்களில் ஏறியும் இறங்கியும் மெதுவாக ஓடிக் 'கோழிமுட்டைக் கரச்சை'யைத் தாண்டிய பின் நெடுங்கரச்சை வெளியூடே சைக்கிளை உழக்கிக் கொண்டு கச்சான் காற்றுக்கு எதிராகச் சென்று கொண்டிருந்தான் தாமோதரம்.

**– தொடரும்....**

## உலகச் செய்திகள்

**அ**மெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் ௨0௨4ஆம் ஆண்டில் அதிபர் பதவிக்கு மீண்டும் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார்.

டிரம்ப் பதவியில் இருந்தபோது தாம் செய்ததாகக் கூறும் சாதனையைப் பற்றிப் பெருமையாகப் பேசினார். "நான்கு குறுகிய ஆண்டுகளில், அனைவரும் சிறப்பாகச் செயல்பட்டனர். அனைவரும் முன்னெப்போதும் இல்லாத வகையில் செழித்து வந்தனர்," என்றும் "இனி ௨0௨4ஆம் ஆண்டு தேர்தல் நாள் வரை, இதுவரை யாரும் போராடாததைப் போல் நான் போராடுவேன். நமது நாட்டை உள்ளிருந்து அழிக்க முயலும் தீவிர இடதுசாரி ஜனநாயகவாதிகளைத் தோற்கடிப்போம்," என்று தனது உரையின்போது பேசினார்.







டெனிஸ்டன்

*- சொறிக்கல்முனை –*




நத்தாரிற்கு நன்மை பிறக்கும்
புத்தாண்டில் புதுமையுதிர்குமெனும்
பொய்யுரை நம்பும் புவி மூடரே
இது இயற்கையின் கை
எழுதிய இறுதி தீர்ப்பு
காலக்கெடு முடியுமட்டும்
கலையாது கிரகணம்...

**ப**கலுலகை ஆளுமொரு ஒளிப்பிழம்பு
பரிதாபமாய் அதன் சூழ இருட்குழம்பு
பொன்வான மாதவன்
புதைகுழி விழுந்தானோ
கழுத்தறுத்து கருப்புப்பை தனில் மறைக்க
தரைகொட்டிய குருதி
வான்மிசை பரந்து போனதோ

பாம்பின் வாய் தவளையென பகலது
இரவின் வாய் மாட்டிக்கொண்டதுவோ
கருத்த மேகங்கள் வெறுத்தழும் துளிகள்
பெருத்த புவியில் சரந்தொடுத்த
மாலையாய் வீழ்வதுவோ
சொற்ப நேர மரண மெத்தையில்
சொக்கியனையோ பகல் காவலனே

கரும்புள்ளடி மேகங்களால் ஒரு காரிருளை அழைத்து
கிரகணம் நடத்தி போக கிரயமாய் கொடுத்து
விரயமாய் போனதொரு தேசம்
விளையாட மண் சோறு சமைக்கும் மகவுகளின் கை
சமையல் சட்டியை தூக்கிகொடுத்த அதிமேதாவிகளே
கிரகண இருட்டு கிழக்கு பக்கமாக விடியாது...
விடியாது என்றும்.

கிரகண காரிருள் மறையும்கால்
கவனம் கடுகளவேனும் இருக்கட்டும்
நஞ்செங்கும் நெஞ்செங்கும் கொட்டிக்கிடக்கும்
முன் தலை காட்டுவோனின்
முகவரி பறிக்கும் காற்றோடு கை வீசிடினும்
சிரசின் மேலுயர்த்தி கிரகணமே போ என்றாதீர்
சொன்னாலும் போகாது...

## வினா விடைப் போட்டி - இல 39

**சரியான விடைகள்**

1. "உம் உடமைகளை விற்று ஏழைகளுக்கு கொடும்" என்று இயேசு கட்டளையிட்டார்.
2. அப்பொழுது நீங்கள் செய்யும் தர்மம் மறைவாயிருக்கும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு கைம்மாறு அளிப்பார்.
3. முகவாட்டமாய் இராதே.
   மக்கள் உன்னை பார்க்க வேண்டும் என்று எதையும் செய்யாதே! உன் தலையில் எண்ணெய் பூசி இயல்பாய் இரு. முகத்தை கழுவு. சோகமாய் காட்சி தராதே!
4. அருள்பணி Michael Lapsley
5. இஸ்ரேல்
6. ஒருவர் உலகமெல்லாம் தனதாக்கிம் கொண்டாலும் தன் ஆன்மாவை இழப்பாராயின் அதனால் வரும் பயன் என்ன.
7. "தெரியாதவை தெரிவிக்கும் உண்மைகள்" என்ற நூல்
8. கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறை சாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்
9. அருள்சகோதரி : Ligy
10. மகாத்மாகாந்தி

***சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:***

- **V. மார்கிறேட்**
  இல. 48, உடையார் வீதி,
  கல்முனை.
- **திருமதி. S. டானியா,**
  24/11, 1ம் குறுக்கு,
  செல்வநாயகம், மட்டக்களப்பு.
- **P. லேஷாஸ்ரீ**
  இல. 54/17, 7ம் குறுக்கு, இருதயபுரம்
  மேற்கு, மட்டக்களப்பு.

பங்குபற்றியோர் - 04 பேர்
சரியான விடை எழுதியிருந்தோர் - 02 பேர்

## முடியும் என்று நம்புங்கள்

# வெற்றி நம் கையில்



ஜே. எச். இரத்தினராஜா

ஆழ் மனதில் நுணுக்கமான, அறிவு பூர்வமான, ஆக்க பூர்வமான விஷயங்களை நாம் பதிய வைப்பதில்லை. நல்லதையே நினைத்திருந்தால் நல்லதே நடக்கும். நம்பிக்கைதான் ஆணிவேர். தீய எண்ணங்களால் ஆழ்மனதை நிரப்பினால் தீயவைதான் பிரதி பலனாகக் கிடைக்கும். நீங்கள் எதனை விதைக்கிறீர்களோ, அதைத்தான் அறுவடை செய்கிறீர்கள். ஆக கம்ப்யூட்டர் மாதிரி ஆழ்மனதில் பதியும் விஷயங்களுக்கேற்ப அதன் பலா பலன்கள் அமைந்திருக்கும்.

யாராவது ஏதாவது சொன்னால் ‘முடியாது’ என்ற பதில்தான் வரும். இது மனிதர்களின் இயல்பு. ‘உன்னால் முடியும் தம்பி’ என்று நம்புகிறவர்கள் எத்தனை பேர்? ‘பிடிக்காது’, ‘வராது’, ‘முடியாது’ என்று ஏன் எதிர்மறையான எண்ணங்களை வளர்த்துக் கொள்கிறீர்கள்.

எடுத்த எடுப்பிலேயே, முயற்சி ஏதும் செய்யாமலே, இது நம்மால் முடியாது என்று சொல்வீர்களானால், ஆழ் மனதில் அதன் தாக்கம் உரம் பெற்று தீய பலனையே தரும். இது சிந்திக்கும் திறனைப் பாதிக்கிறது. முன்னேற்றத்தைத் தடுக்கிறது. முயற்சி மேற்கொள்ள இடம் தராமல் தடை செய்கிறது.

முயற்சி செய்து பார்ப்போம் என்று பிரயத்தனம் மேற்கொள்ளும்போது ஒரு முனைப்பு ஏற்படுகிறது. முயற்சி தம் மெய் வருத்தக் கூலி தருமன்றோ. முயற்சி பலன் தரும் என்ற நம்பிக்கை லேசாக நம் மனதில் துளிர்விட ஆரம்பிக்கிறது. கடைசி வரை முயன்று பார்ப்போம் என்ற உறுதி ஏற்படுகிறது. பலன் கிட்டாவிட்டாலும் முயற்சியாவது செய்தோமே என்ற மன நிறைவு ஏற்படுகிறது. முயற்சி திருவினையாகும்போது நல்ல பலனும் கிடைக்கிறது.

எண்ணிய எண்ணியாங் எய்துவர்
எண்ணியர் திண்ணியராகப் பெறின்

என்பது வள்ளுவர் வாக்கு. அந்த எண்ணம் வலிமையுடையதாக இருந்தால் அதனால் நிச்சயம் பலன் கிட்டுகிறது. எண்ணும்போதே எதிர்மறையான எண்ணங்களை எண்ணாமல் ஆக்கபூர்வமானதாக, பயனுள்ளதாக, வெற்றி தரும் எண்ணங்களைத்தான் எண்ணவேண்டும்.

வருகின்ற வாய்ப்பினை இறுகத் தாளிட்டு தடுத்து விடுவதால், எதையும் செய்யும் துணிவை அது நசுக்கி விடுகிறது. மேலும் வெற்றி வாய்ப்பினையும் பறித்து விடுகிறது. மூளையின் சிந்தனைத்திறன் ஆளுமை, ஆற்றல், எதையும் சாதிப்போம் என்ற தைரியம், ஊக்கம், கனவுகள் மெய்ப்படவேண்டும் என்ற எண்ணம் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராய்ப் பயனற்றுப் போகின்றன.

செயல் திறன் கதவுகளை மூடாமல் நன்கு திறந்து வையுங்கள். உங்களுக்குச் சங்கடத்தைத் தரும், ஏமாற்றத்தைத்தரும், நம்பிக்கையைச் சிதைக்கும் எண்ணங்களைக் குப்பை எனத் தூரத் தள்ளுங்கள். வீட்டைக் கூட்டி குப்பையை வெளியே கொட்டினால் வீடு சுத்தமாவது போல, மனமும் சுத்தமாகும், தெளிவாகும். சலனமின்றி இருக்கும். அமைதியான அந்த ஆழ் மனதில் நல்ல கனவுகளை நிரப்புங்கள். இன்பகரமான நினைவுகளை அசை போடுங்கள். உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட பயனுள்ள நல்ல விஷயங்களைத் திரும்பத் திரும்ப எண்ணிப் பாருங்கள். அந்த எண்ணம் வலுப்பெற்று, ஊக்கமடைந்து, உயிர்ப்புடன் மலர்ச்சி அடையும்போது, என்னால் முடியும் என்ற உறுதியான நம்பிக்கை வெளிப்படுவதைக் காணலாம்.

மெழுகுவர்த்தி லேசாக எரிந்து, இருளை அகற்றி, எங்கும் ஒளி வீசுவது போல உங்கள் உள்ளத்தில் ஒளி தோன்றும். வழி பிறக்கும். உற்சாகம் பெருகும். கம்ப்யூட்டர் பட்டனைச் சரியாகத் தட்டினால் நீங்கள் எதைப் பெற விரும்பு கிறீர்களோ, அது கம்ப்யூட்டர் திரையில் தெரிய ஆரம்பிப்பதுபோல, மனத்திரையில் செயல்திறன் உருவாகும்.

உங்களுடைய தோல்வி மனப்பான்மை, மனச்சோர்வு, இயலாமை பற்றிய பயம் எல்லாம் விலகும். உங்கள் வாழ்க்கையில் புதிய அத்தியா யத்தை ஆரம்பிக்கிறீர்கள். ஆகவே, இனி "முடியாது" (Impossible) என்று ஒரு போதும் சொல்லாதீர்கள். அச்சொல்லை உங்கள் மன அகராதியிலிருந்து அப்புறப்படுத்தி விடுங்கள். முடியாது என்பது முன்னேற்றத்திற்கான தடைக் கல்லாகும்.

முடியாது என்று ஒன்றுமே இல்லை என்று திரும்பத் திரும்ப நினைவு கூருங்கள். பிரச்சி னையை எப்படியும் சமாளித்தேயாக வேண்டும். நாம் கடுமையான முடிவுகளை மேற்கொள்ளத்தான் வேண்டும். இலட்சியத்தை அடையும் வரை மனம் தளரக்கூடாது என்று உறுதியான சங்கல்பத்தை மேற்கொள்ளுங்கள்.

சரியான முடிவை மேற்கொள்ளும் ஆற்றல் என்னிடம் இருக்கிறது. சாத்தியக்கூறுகளைத் தெளிவாக ஆராய்ந்து முடிவு மேற்கொள்வதே எனது இலட்சியம். அந்த இலட்சியத்தை எப்படியும் அடைந்தே தீருவேன் என்று எண்ணுங்கள்.

நிச்சயம் என்னால் சிகரத்தை எட்ட முடியும். சாதனையாளர்களின் பட்டியலில் நானும் இடம் பெறுவேன். வெற்றி கிட்டும் வரை தொடர்ந்து முயற்சியை மேற்கொள்வேன் என்பதே எனது ஆக்கபூர்வமான சிந்தனை.

நீங்கள் செய்யவேண்டிதெல்லாம் இந்த ஆக்கபூர்வமான சிந்தனையை வளர்த்துக் கொள்வ துதான். நம்பிக்கைதான் மன உறுதி. ஆழ்மனதில் இவற்றை உரமிடுங்கள். பயிர் நன்றாக வளர்ந்து உயரிய பலனைத்தரும். மலரப்போகும் புது வருடத்தில் இச்சிந்தனையை மனதில் இருத்துங்கள். வெற்றி பெற வாழ்த்துக்கள். ■

## பார்வைகள் பலவிதம் – 15

ஒருநாள் ஒருவர், ஒரு வங்கியில் பணம் எடுத்துக்கொண்டு பணப்பெட்டியைப் பின்னால் மாட்டிக்கொண்டு இரண்டு சக்கர வாகனத்தில் வேகமாகச் சென்றார். வண்டியின் அதிர்வில் அந்தப் பெட்டி இலேசாகத் திறந்து கொண்டு, நூறு பத்து ரூபாய் தாள்கள் கொண்ட ஒரு கட்டு கீழே விழுந்து விட்டது. அது தெரியாமல் அந்த நபர் வண்டியை ஓட்டிக்கொண்டு சென்று விட்டார். கீழே விழுந்த வேகத்தில் நூறு பத்து ரூபாய் தாள்கள் கொண்ட அந்தக் கட்டிலிருந்து ஒரே ஒரு பத்து ரூபாய் தாள் மட்டும் விடுபட்டு காற்றில் பறந்து சிறிது தூரத்தில் கிடந்தது. அந்த ஒற்றை பத்து ரூபாய் தாள் இருந்த வழியில் ஒருவர் வந்தார். இந்த தாளைக் கண்டு, "இன்று நரி முகத்தில் விழித்திருக்கிறேன் போல் என நினைத்து மிகவும் மகிழ்ந்தார். அந்த தாளை எடுத்துக்கொண்டு உணவகத் திற்குப் போனார். அன்றைய விலைவாசியில் இரண்டு இட்லி, ஒரு காப்பி சாப்பிட்டார். அருகிலிருந்த கோவில் உண்டியலில் மீதியிருந்த ஒரு ரூபாயைப் போட்டு கடவுளுக்கு நன்றி சொல்லி, மகிழ்வாக வீடு திரும்பினார். மீதி தொண்ணூற்றொன்பது பத்து ரூபாய் கொண்ட கட்டு, அது விழுந்த இடத்திலேயே கிடந்தது. அந்த வழியாக வந்த ஒருவர், இந்த ரூபாய்த் தாள் கட்டைப் பார்த்து எடுத்தார். பரபரவென்று எண்ணினார். தொண்ணூற்றொன்பது தாள்கள். மீண்டும் மீண்டும் பலமுறை எண்ணினார். தொண்ணூற்றொன்பது தாள்கள். மீண்டும் மீண்டும் பலமுறை எண்ணினார். தொண்ணூற்றொன்பது தாள்கள்தான். வங்கியில் தொண்ணூற்றொன்பது தாள்கள் கொண்ட கட்டு கொடுக்கமாட்டார்களே' அந்த ஒற்றைப் பத்து ரூபாய் தாள் இங்கே பக்கத்தில்தான் கிடக்க வேண்டுமென்று தேட ஆரம்பித்தார். இன்னும் அவர் தேடிக்கொண்டிருக்கிறாராம்.



எனவே, இந்த நபர் போல, இல்லாத ஒன்றைத் தேடி அலைந்தால், நம்மிடம் இருப்பதை உணராமல் போய் விடுவோம். அதனால், நம் உடலும், மனமும் சோர்ந்து துயருறும். மாறாக, இருப்பதை நினைத்து மகிழ்ந்து அதில் வளர்ச்சி காண முயற்சிப்போம்.

நாம் என்ன பெறுகின்றோமோ, அவற்றால் வாழ்கின்றோம். ஆனால், நாம் என்ன கொடுக்கின்றோமோ, அதிலிருந்து வாழ்வை அமைக்கிறோம். - வின்சன்ட் சேர்ச்சில்

– ஹென்ரி



# அந்தோனியாரும் அடைக்கலமும்



சிறுகதை

– பைந்தமிழ்க்குமரன் டேவிட் –

**வ**ழமையாக எட்டரை மணிபோல வெளிக்கிட்டு கடமைக்குச் செல்லும் அடைக்கலம் அண்ணன் இன்று எட்டு மணிக்கெல்லாம் ரெடியாகிவிட்டார். மனைவி கமூவி அயன் பண்ணி வைத்திருந்த றவுசர் சேர்ட் அவருக்கு எடுப்பாகத்தானிருந்தது.

"என்னப்பா இண்டைக்கு நேரகாலத்தோட போறீங்க" என்றார்.

"சோணல் ஒபிசில முக்கியமான வேலைகள் கிடக்கு. அதுகள முடிச்சுப் போட்டுத்தான் எங்கட டிவிசன் ஒபிசுக்கு போகோணும்..." என்றபடியே சப்பாத்துகளை துணியால் துடைத்து காலணிகளை இழுத்து விட்டுக்கொள்கிறார். வயது ஐம்பத்தெட்டு: ஆனாலும் யாரும் சொல்ல முடியாதபடி கட்டுமஸ்தாகத்தான் இருக்குது மனிசன்.

கோதுமை மாவும் விலையேறிப் போச்சு. அரிசு மா பிட்டும் சூடைக்கருவாடு போட்ட சம்பலும் வந்தது. ஆற அமர சாப்பிட முடியாதவராக அள்ளி வாயில் போடும் போது தொண்டை விக்கலெடுத்தது. தண்ணீர்செம்பை நீட்டியபடி தலையில் மூணு தட்டுத் தட்டினாள் மனைவி. விக்கல் சாக்கில் இப்பிடியாச்சும் ரெண்டு மூண்டு சாத்த முடிஞ்சிதே என்று அவள் நினைப்பாள் என்று அவர் நினைத்தார். ஆனால் பாவம் மனிசன் நாலு வாய் ஆறுதலா தின்னவும் நேரமில்ல என்றுதான் அவள் நினைத்தாள். போன மாதம் மகளுக்கு சல்வார் வாங்கியபோது புடவைக் கடை கொடுத்த பைதான் இப்போது அவரது ஓபிஸ் வேக். அதைத் தூக்கியவர்,

"தம்பி அந்த கியுஆர் பேப்பர் துண்ட தா மகன் பெற்றல் போடவேணும்" அதை வாங்கி சேர்ட் பையிலே சொருகும்போது அடையாள அட்டையுடன் ஒன்றாக இருந்த அந்தோனியார் படம் தென்பட்டது. படத்தை எடுத்து, "அந்தோனியாரே காப்பாத்துங்க ஐயா...." என்று முணுமுணுத்தபடி மீளவும் பாதுகாப்பாக சட்டைப் பைக்குள் சொருகிவிட்டு பைக்கை தள்ளுகிறார். 'புஸி... புஸி...' என்ற சத்தம் கேட்கிறது. கேற்றடிக்கு வரவும் கறுத்த பூனை பாய்ந்து பாய்ந்து குறுக்காக ஓடவும் சரியாயிருந்தது.

"சீ.... சனியன் பூனை...." என்றார்.

"ஐயா நீங்களா...." என்றபடி ஆறுமுகம் வந்து,

"ஐயா பூனை குறுக்கால போனா போற காரியம் வெளங்காது. இது வேற கறுத்தப்பூனை. பேசாம வளவுக்க திரும்பப் போய் முகம் கை கால் கழுவிப்போட்டு மூணுவாய்த் தண்ணி குடிச்சி சுணங்கிப் போங்கய்யா...." என்கிறான். அவன் அடுத்த அலுவலகத்தின் காவலாளி. கறுத்த பூனை குறுக்கிட்டத விடவும் ஆறுமுகத்தின் சொற்கள் ஆழமாக விழுந்தன. கால்கள் தயங்கின. தலையைத் திருப்பினார்.

"என்னப்பா..." என்றாள் மனைவி.

"ஒண்டுமில்ல.... நான் அவசரமாப் போகோணும்... போய் வாறன்...." என்றபடி உதைத்தார் பைக் உறுமியது. ஆறுமுகத்தைப் பார்த்து சுண்டுவிரலை வாயில் வைத்து 'பேசாதே' என்று சைகை காட்டினார். பைக் உருளத் தொடங்கியது. இப்போ அவரின் சிந்தனையில் கறுத்தப்பூனை நடனமாடத் தொடங்கிவிட்டது. ஏதும்

விபத்துக்கள் வருமோ...? ஒவ்வொன்றாக மனதில் எண்ணங்கள் அலைமோத அவற்றிடையே கறுத்தப் பூனையின் முகம் விகாரமாக வந்துபோனது.

மறுபுறம் 'என்ன முட்டாள்தனமிது. நாம இதை யெல்லாம் நம்புறதா...? சேர்ட் பையில அந்தோனியார் இரிக்காரு. அவர நம்பித்தானே வெளிக்கிட்டது. பிறகேன்...?' என்ற சிந்தனை சிலிர்த்து வந்தது. கூடவே பழைய ஞாபகமொன்று மெல்லக் கிளம்பியது.

அப்போ அடைக்கலம் ஆறாம் வகுப்பு. பாடசாலை யில் ஒருநாள் மெஜிக் செய்பவன் பலவிதமான மாயா ஜாலங்களை காட்டின பின்பு முற்றத்தில் கிடங்கு வெட்டி தன்னோடு வந்த சிறுவனை அதனுள் கிடத்தி கரும்பலகை களை மேலே பரப்பி அதன் மேலாக மண் பரவி ஒரு சில நிமிடங்களில் மீள எடுத்தபோது சிறுவன் சிரித்துக் கொண்டு நின்றான். அன்று வீட்டின் பின்புறமாக மடு வெட்டி வரிப்பூனையை பிடித்து புதைத்து மேலாக பலகை போட்டு மண்ணை பரவி முடிக்க அம்மா கூப்பிட ஒரே ஓட்டம். பூனையும் மறந்து போனது. அடுத்தநாள் விடியச் சாமம் தோண்டிப் பார்த்தபோது பூனை செத்துக்கிடந்தது. அந்தப் பூனைப் பாவம் இப்பவும் தொடருதோ என்ற எண்ணம் வேறு இப்போ வந்தது. 'ச்சீ .... அது வரிப்பூனை .... இப்ப குறுக்கால ஓடினது கறுத்தப் பூனை. சிலவேளை வரிப்பூனைதான் கறுத்தப் பூனையா மறுபிறவி எடுத்து வந்ததோ...?' மீண்டும் சிந்தனையில் பூனை நடனம். கவனம் கொஞ்சம் சிதறுகிறது. மயிரிழையில் ஒரு ஓட்டோவை விலகவும் அவன் கைகாட்டி திட்டியபடி போகின்றான். முகமெல்லாம் வியர்வை. மனதில் கறுத்தப்பூனை துள்ளிக் குதிக்கிறது. அந்தோனியாரே என்று வாய் முணுமுணுக்கிறது. அவர் உயர்ந்து பிரகாசிக்கின்றார். 'பூனை குறுக்கிட முன்னமே அந்தோனியார புடிச்சிற்றோமில்ல... அப்ப பூனை எதுவும் செய்ய ஏலாதில்ல....' என்கிறது மனம்.

அலுவலகத்துள் நுழைகிறார். லீவு கிளாக் குட் மோனிங் கொடுத்து வரவேற்று மிக சுலபமாக வேலையை முடித்துக் கொடுக்க நிம்மதியாக தலையை நிமிர்த்துகிறார். கறுத்தபூனை ஒரு காலை இழந்து நிற்கிறது. எக்கவுண்ட் பிரிவில் கிளைம் வவுச்சர் மூன்றும் நீட்டிய நிமிடங்களிலே முடிச்சுக் கொடுக்கப்பட ஆசுவாசமாக நிமிர்கிறார். பூனை மறுகாலையும் இழந்து விடுகிறது. வராந்தாவால் வருகிறார். பெரியவர் எதிர்பட்டு அவர் சேவையை ஓகோ வென்று புகழ்கின்றார். கண்கள் கலங்க,

"ஐயா...." என்கிறார். பூனை காலையும் இழந்து போனது. புதிய தெம்பு பிறக்கிறது. திரும்புகின்றார். ஒன்றரை வருடமாக இழுத்துக்கொண்டு கிடந்த பத்து மாதக் கடன் காசோலையை எக்கவுண்டன்ட் நீட்டியதும் 'ஐயா அந்தோனியாரே' என்று அவர் சத்தமாகவே அழைக்கின்றார். மனதில் பூனை செத்து விழுந்து மறைகிறது. அந்தோனியார் உயர்ந்து ஒளிவீசியபடி தெரிகிறார். 'நானென்ன அவவிசுவாசி முட்டாள் முட்டாள்' என்று தன்னையே திட்டியபடி அடைக்கலம் அண்ணன் தனது அலுவலகத்தினுள் நுழைகிறார். இண்டைக்கு மதியம் அந்தோனியாரை சந்திக்காமல் வீடு திரும்புவதில்லை என்பதை மனதில் எழுதிக்கொள்கிறார்.

❖ ❖ ❖ ❖

---

**உயிர்த்த ஞாயிறு .... 7ம் பக். தொடர்....**

இராயப்பு யோசப் ஆண்டகையின் அழைப்பின் பேரில் இணைந்து நிலையான அமைதிக்காகப் போராடியுள்ளார். இதனை எல்லோரும் அறிந்தி ருக்க வாய்ப்பில்லை. கர்தினால் யுத்த காலத் தில் தமிழர்களுக்காக வெளிப்படையாக குரல் கொடுக்கவில்லையென்பது ஒரு குறையாகக் கருதப்பட்டாலும், பலரது ஆதங்கமாக இருந்தா லும், தற்போது உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பின் பின்பு உருவான சூழ்நிலையை எமக்குச் சாதகமாக பயன்படுத்த வேண்டு மென்பதே எனது தனிப்பட்ட கருத்து.

**கேள்வி:** காலிமுகத்திடல் போராட்டம் போல் கர்தினா லின் எதிர்ப்பு நிலை நாளடைவில் அடக்கியொடுக் கப்பட்டுவிடுமா?

**பதில்:** காலிமுகத்திடல் போராட்டம் சோர்வ டையலாம். நாட்டில் ஒரு மாற்றம் வரவேண்டு மென்பதற்காக நடந்த போராட்டம் அது. காலிமுகத்திடல் போராட்டம் கலைந்து போனாலும் நாட்டின் அரசியல் பொருளாதார நெருக்கடிகளைப் பொறுத்து அது இனி எந்த வடிவமும் எடுக்கலாம். எது எப்படி வந்தாலும் நீதிக்கான எமது போராட்டம் தொடரும். அதிலி ருந்து பின்வாங்கப் போவதில்லையென்பதில் கர்தினால் உறுதியாக இருக்கிறார். அதேவேளை பாதிக்கப்பட்டுள்ள எமது தமிழ் மக்களின் நீதிக் காகவும் தமது பங்களிப்பை பிரதானப்படுத்து வதாகவும் வாக்களித்துள்ளார்.

> மனிதனுடைய பேச்சுதான் அவன் எண்ணங்களை வெளிப்படுத்தும் கண்ணாடி.
>
> – சீனப் பொன்மொழி

# கூட்டொருங்கியக்கத் திருஅவை

■ அருட்தந்தை பிறைனர் செலர்



## 3. மனம் திறந்து பேசுதல்

| பதில் மொழி | 3. மனம் திறந்து பேசுதல் |
|---|---|
| **அனுபவங்களை ஆழமாக உற்று நோக்குவோம்** | 6. இந்த அமர்வின் மகிழ்ச்சியானத் தருணங்கள் எவை?<br>7. சந்தித்தத் தடைகளும் சிக்கல்களும் யாவை?<br>8. நம்மில் என்ன காயங்களை அவை வெளிப்படுத்தின?<br>9. இந்த அனுபவங்கள் தூண்டும் உள்ளுணர்வுகள் யாவை? |
| **கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்** | 1. தூயஆவியார் நம்மிடம் கேட்பது என்ன?<br>2. உறுதிப்படுத்த வேண்டிய கருத்துக்கள், மாற்றத்திற்கான வாய்ப்புக்கள், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை?<br>3. திருஅவைக்கு என்ன புதிய பாதைகள் தென்படுகின்றன? |

## 4. கொண்டாடுதல்

கொண்டாடுதல் இணைந்து பயணித்தலில் முக்கிய பங்கு வகிக்கிறது. நமது வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் கொடையாகத் தரப்படுகின்றன என்பதால் நம்மில் நன்றி உணர்வு ஏற்படுகிறது. அப்போதுதான் நம்மால் கொண்டாட முடியும். நம்மிடையே பல குறைபாடுகள் இருந்தாலும் அவற்றினிடையே நல்ல முயற்சிகள், சிறு சிறு வெற்றிகள், நன்மைகள் நிகழ்வதைக் கவனித்து கொண்டாடும் போது நமக்கு எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக்கை பிறக்கும், தேவையான புது முயற்சிகளை எடுக்கும் துணிச்சல் கிடைக்கும்.

இந்த நன்றியுணர்வுகளை ஒன்றிணைக்கும்போதுதான் நமது வழிபாடுகள் பொருள் செறிந்தவையாக மாற முடியும். நமக்கும் வாழ்க்கைப் போராட்டத்தில் பிடிப்பும் ஏற்படும். இந்தப் பண்பை வளர்ப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

| பதில் மொழி | 4. கொண்டாடுதல் |
|---|---|
| **அனுபவங்களைப் பகிர்வோம்** | 1. நம்மிடையே கொண்டாடும் உணர்வு உள்ளதா? அதை எப்படி வளர்க்கலாம்?<br>2. நம்மிடையே பல குறைபாடுகள் இருந்தாலும் அவற்றினிடையே நல்ல முயற்சிகள், சிறு சிறு வெற்றிகள், நன்மைகள் நிகழ்வதைக் கவனிக்கிறோமா? அவற்றைக் கொண்டாடுகிறோமா?<br>3. நமது வழிபாட்டுக் கொண்டாட்டங்களும் விழாக்களும் நன்றி உணர்வைப் பிரதிபலிக்கின்றனவா?<br>4. இறைவேண்டலும் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களும் எவ்வாறு நமது வாழ்வையும் பணியையும் வழிநடத்துகின்றன?<br>5. இறைவார்த்தையை எடுத்துரைக்க பொதுநிலையினரை, துறவியரை எவ்வாறு ஈடுபடுத்தலாம்?<br>6. நமது வழிபாட்டுக் கொண்டாட்டங்கள் இணைந்து பயணிக்கும் திருஅவையை பிரதிபலிக்கின்றனவா? திருநிலையினர் ஆதிக்கத்தைப் பிரதிபலிக்கிறனவா?<br>7. என்னென்ன மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்? |

| | |
|---|---|
| **அனுபவங்களை ஆழமாக உற்று நோக்குவோம்** | 8. இந்த அமர்வின் மகிழ்ச்சியானத் தருணங்கள் எவை?<br>9. சந்தித்தத் தடைகளும் சிக்கல்களும் யாவை?<br>10. நம்மில் என்ன காயங்களை அவை வெளிப்படுத்தின?<br>11. இந்த அனுபவங்கள் தூண்டும் உள்ளுணர்வுகள் யாவை? |
| **கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்** | 12. தூயஆவியார் நம்மிடம் கேட்பது என்ன?<br>13. உறுதிப்படுத்த வேண்டிய கருத்துக்கள், மாற்றத்திற்கான வாய்ப்புக்கள், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை?<br>14. திருஅவைக்கு என்ன புதிய பாதைகள் தென்படுகின்றன? |

## 5. மறைப்பணியில் கூட்டுப் பொறுப்பு

நல்ல முயற்சிகளை வளர்ப்பதாக இருந்தாலும் குறைபாடுகளைக் களைவதாக இருந்தாலும் அதில் தனி மனிதர்கள் மற்றும் சிறுசிறு குழுக்களின் பங்களிப்பு அவசியமானது. நாம் நல்லது நடக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். மாற்றம் தேவை என்று நினைக்கிறோம். ஆனால் அதனை வேறு யாராவது செய்ய வேண்டும் என்று காத்திருக்கிறோம். இந்தப் பொறுப்பின்மையைத்தான் கடமையில் தவறியக் குற்றம் என்று பாவ அறிக்கை செய்கிறோம்.

உறவுச் சமூகமாகவும் உரையாடும் தளங்களாகவும் நமது சூழல் மாற வேண்டும் என்று விரும்பும் நாம், பல பரிந்துரைகளைக் கொடுக்கும்போது அவற்றை நடைமுறைப்படுத்துவதில் நமது பங்களிப்பு எப்படிப்பட்டதாக இருக்கும் என்று இணைந்து சிந்திப்பது ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு வகை செய்யும். இதற்குரியச் சூழலை நம்மிடையே உருவாக்கி கூட்டுப் பொறுப்பை வளர்ப்பது சமத்துவப் பங்கேற்போடு இணைந்து பயணிக்க உதவும்.

| பதில் மொழி | 5. மறைப்பணியில் கூட்டுப் பொறுப்பு |
|---|---|
| **அனுபவங்களைப் பகிர்வோம்** | 1. உலகை ஊடுருவுவதில், நற்செய்தி மனநிலையோடு இன்று எவ்வாறு திருமுழுக்குப் பெற்றவர் நற்செய்தி அறிவிப்புப் பணியில் பங்கேற்கிறார்?<br>2. அரசியல், பண்பாடு போன்றத் துறைகளில் நம்மால் பிறரோடு இணைந்து முழுமையாக ஈடுபட முடிகிறதா?<br>3. நமது சமுதாயத்திற்கு நாம் ஆற்றும் பல்வேறு பணிகளில் (சமூக, அரசியல் ஈடுபாடு, அறிவியல், ஆராய்ச்சி, கல்வி, சமூக நீதிக்காக உழைத்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல், சுற்றுச் சூழலைப் பேணுதல் போன்றவை) நமது சமூகம் நமக்கு உறுதுணையாக உள்ளதா? நாம் இணைந்து பொறுப்பேற்கிறோமா?<br>4. சமூகத்திற்குப் பணியாற்ற எந்தெந்த வழிகளில் நாம் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க முடியும்?<br>5. கூட்டுப் பொறுப்பு என்ற உணர்வு நம்மிடையே வளர்க்கப்பட்டிருக்கிறதா? வளர்க்க என்ன செய்யலாம்? |
| **அனுபவங்களை ஆழமாக உற்று நோக்குவோம்** | 6. இந்த அமர்வின் மகிழ்ச்சியானத் தருணங்கள் எவை?<br>7. சந்தித்தத் தடைகளும் சிக்கல்களும் யாவை?<br>8. நம்மில் என்ன காயங்களை அவை வெளிப்படுத்தின?<br>9. இந்த அனுபவங்கள் தூண்டும் உள்ளுணர்வுகள் யாவை? |
| **கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்** | 10. தூயஆவியார் நம்மிடம் கேட்பது என்ன?<br>11. உறுதிப்படுத்த வேண்டிய கருத்துக்கள், மாற்றத்திற்கான வாய்ப்புக்கள், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை?<br>12. திருஅவைக்கு என்ன புதிய பாதைகள் தென்படுகின்றன? |

- தொடரும்.....

அரசியல்



# வரவு செலவு திட்டம்

- குடிமகன் -

வரவு செலவுத் திட்டம் பாராளு மன்றத்தில் தெரிவிக்கப் பட்டுவிட்டது; அதில் என்ன உள்ளது என்பது அனைத்து மக்களுக்கும் தெரியும். அரசாங்க ஊழியர்கள் உட்பட அனைத்துப் பொதுமக்களுக்கும் இதில் ஏமாற்றம்தான்: இந்த ஏமாற்றத்தை அவர்கள் ஏற்கனவே எதிர்பார்த்து இருந்தமையால் வரவு செலவுத் திட்டத்தில் அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதேயுண்மை. வரவு செலவுத்திட்ட வாசிப்பு முடிந்ததும் பாராளு மன்றத்தில் அனைவரும் ஒன்றாக அமர்ந்து சிரித்து தேனீர் குடித்துக்கொண்டிருந்த காட்சிகள் சில பொதுஜனங்களுக்கு சங்கட உணர்வை ஏற்படுத்தியிருக்கும் என்பதும் உண்மைதான்.

2023ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தான் இது! ஆனால் அதில் சில விடயங்கள் இந்த நவம்பரிலே நடைமுறைக்கு வந்துவிட்டன. உதாரணமாக கடவுச் சீட்டுக் கட்டணங்கள் 2022 நவம்பர் 17ம் திகதி முதல் அதிகரிக்கப்பட்டுவிட்டது. சாதாரண சேவை ரூபா 3500 இல் இருந்து ரூபா 5000 ஆகவும் ஒருநாள் சேவை ரூபா 15000 இல் இருந்த ரூபா 20000 ஆகவும் அதிகரிக்கப்பட்டு விட்டது. இவ்வாறே இன்னும் பல சேவைகளும் உயரப் பறந்து விட்டன.

ஒரு கௌரவ அமைச்சர், 'எந்தவிதமான வரி உயர்வுகளுமில்லா பஜ்ஜெட்' என்று பாராட்டி யுள்ளார். அது அப்பட்டமான உண்மைதான். எல்லாவரி அதிகரிப்புகளும் 'பஜ்ஜெட்'டுக்கு முன்பே அதிகரிக்கப்பட்டுவிட்டன. அவர்

'உண்மையான அரசியல்வாதி' என்பதை உறுதிப்படுத்திவிட்டார். சாதாரண பொதுமக்களுக்கு 'அடகு' வைக்கவும் தங்கம் இல்லை; கைமாற்று வாங்கவும் ஆள் இல்லை; பண்டிகைகளை கொண்டா டவும் வழியில்லை. ஆனால் ஆலயத் திருவிழா 'லிஸ்ட்'டுகளுக்கும் பஞ்சம் இல்லை.

ஆலயக் காணிகளை கபளீகரம் செய்யும் நடவடிக்கைகள் பகிரங்கமாகவும், இரகசியமாகவும் முன்னெடுக்கப்படுகின்றன என்பது பற்றி பொதுவாகப் பேசப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியமும் இது தொடர்பாக பல்வேறு கலந்துரையாடல்களை நடாத்தியிருந் தது. குறிப்பாக கிழக்கு மாகாணத் தலை நகரின் பாடல்பெற்ற திருத்தலம் தொடர்பாக ஆராய்ந்தி ருந்தது. அங்கு சென்று கவனயீர்ப்பு செயற்பாடு ஒன்றை நடாத்தவும் எண்ணியிருந்தது. ஆனால் அங்கிருந்து கிடைத்த தகவல்களை அதற்கு சாதகமாக இருக்கவில்லையாம்.

இங்கிருந்து சென்று நடவடிக்கையொன்றை எடுத்தால் அதற்கு எதிராக தென்னிலங்கை மற்றும் அண்டிய மாவட்டங்களில் இருந்து 'காவி'கள் உட்பட பெரும் எண்ணிக்கையான மக்கள் குவிக்கப்பட வாய்ப்பு உண்டு என தெரிவிக்கப்பட்டதாம். 'குருந்தூரில்' நீதிமன்ற கட்டளைகளையே மீறுபவர்கட்கு இது பெரும் வேலையில்லை. எனவே நாசூக்கான நகர்வுகட்கு இது தடையாவிடும் என்பதும் உண்மையே! எனவே அவர்கள் அங்கு சென்று நிலைமைகளை அவதானித்து வந்துள்ளார்கள்.

தமிழ்க்கட்சிகளுக்குள் போட்டி இழுபறிகள் வெளிப்படையாக தெரியத் தொடங்கியுள்ளன. தற்காலத்தில் மிதமான போக்குகள்தான் சரியான தேர்வுகளாக இருக்கும் என்பதே அபிப்பிராயம். எதற்கெடுத்தாலும் எதிர்ப்பு உணர்வுகள்தான் சிலரிடம்: இன்னும் சிலரிடம் மௌனப் போக்கு. மக்கள் மடையர்கள் அல்ல என்பதையும் சகலரும் உணரவேண்டும். தந்தை செல்வாவையும் அவரின் கூற்றுகளையும் ஏன் துண்டு துண்டாக்குகின்றீர்கள். கையூட்டு வாங்குவதும், காணிகள் சேகரிப்பதும் மட்டுமல்ல அரசியல் அநாகரீகம்; இதுவும் அநாகரீகம்தான். தலைவர் பதவி ஆசையும் அதுபோலத்தான்.

●●●



# திருஅவைச் செய்திகள்

## உக்ரைனில் போர்நிறுத்தத்திற்குத் திருத்தந்தையின் அழைப்பு

போரை நிறுத்துமாறு தனது இதயத்திலிருந்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்புவிடுக்கிறார் என்று உக்ரைனுக்கான திருப்பீடத் தூதர் பேராயர் *Visvaldas Kulbokas* அவர்கள் அண்மையில் பஹ்ரைனுக்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொண்டு திரும்புகையில் விமானத்தில் செய்தியாளர் சந்திப்பின்போது கூறியுள்ளார்.

இரஷ்ய மற்றும் உக்ரேனிய மக்கள் மீது அவர் கொண்டிருக்கும் அன்பு, பாசம் பற்றி பேசியதுடன், மிகவும் பிரபலமான இரஷ்ய எழுத்தாளர் தஸ்தாயெவ்ஸ்கியை மேற்கோள் காட்டினார் என்றும், திருத்தந்தை தனது இதயத்திலிருந்து இரஷ்ய மக்களிடம் பேச முயன்றதை எளிதாகப் புரிந்து கொள்ள முடிகிறது என்றும் கூறியுள்ளார். கத்தோலிக்கத் திருஅவையின் தலைவராக மட்டுமல்ல, ஒரு சிறந்த மனிதராகவும் திருத்தந்தை தனது எண்ணங்களை சுதந்திரமாக வெளிப்படுத்தியுள்ளார் என்று கூறிய பேராயர் அவர்கள், மனித உயிரின் மீதான மரியாதை மற்றும் போரை நிறுத்துவதன் அவசியத்தை பற்றி நற்செய்தி மட்டுமல்ல, மனிதகுலம் முழுவதுமே பேசுகிறது என்று தனது நேர்காணலில் திருத்தந்தை சுட்டிக்காட்டியுள்ளதையும் தெரிவித்துள்ளார்.

## மற்ற மதங்களோடுள்ள உறவை வளர்த்துக் கொள்ளவேண்டும்


நவம்பர் மாதம் 11ம் திகதி வெள்ளிக்கிழமை யன்று பெங்களூருவில் தொடங்கிய, CCBI எனப்படும் இந்திய இலத்தீன் வழிபாட்டு முறை கத்தோலிக்க ஆயர் பேரவையின் 33வது ஆண்டு நிறையமர்வு கூட்டத்தில் உரையாற்றிய பேராயர் ஜிரெல்லி அவர்கள், அனைத்துக் கிறிஸ்தவர்களும், மற்றவர்களோடு உரையாடுவதற்குத் தங்களை அர்ப்பணிக்கவேண்டும், அதன் வழியாக, அறநெறி விழுமியங்கள் பாதுகாக்கப்படும் மற்றும், படைப்பனைத்திலும் கடவுள் வாழ்த்தப்படுவார் என்று கூறியுள்ளார்.

அமைதிக் கலாச்சாரத்தைப் பேணிவளர்க்கும் வண்ணம், பல்சமய உரையாடலையும், மக்கள் மத்தியில் உறவுகளையும் ஊக்குவிக்கவேண்டும் என்றும், பேராயர் ஜிரெல்லி அவர்கள் இந்திய ஆயர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## இலங்கை குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டோர்க்கு இலவச வீடுகள்

இலங்கையில் 2019ம் ஆண்டு உயிர்ப்புப் பெருவிழாவன்று நடைபெற்ற குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்ட 12 குடும்பங்களுக்கு நவம்பர் மாதம் 14ம் திகதி திங்கள்கிழமை இலங்கையின் கொழும்பு புறநகர்ப் பகுதியில் இலவச வீடுகள் புனித அந்தோனியார் வீட்டுமனைத் திட்டத்தாரால் கர்தினால் மால்கம் இரஞ்சித் அவர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில், இலங்கைப் பேராயர் கர்தினால் மால்கம் இரஞ்சித் அவர்கள், துணைப் பேராயர் அன்டன் இரஞ்சித் அவர்கள் கொழும்பு காரித்தாஸ் அமைப்பின் தலைவர் அருள்பணி இலாரன்ஸ் ராமனாயக் அவர்கள் மற்றும் அருள்பணியாளார்கள் பலர் பங்கேற்றனர்.

இத்தாலி நாட்டின் பதுவா நகர் காரித்தாஸ் அமைப்பான அந்தோனியானாவால் நிதியளிக்கப்பட்டு இலங்கையின் வடக்குப் பகுதியில் கட்டப்பட்டுள்ள 12 வீடுகள் வழங்கும் நிகழ்வில் பங்கேற்ற கர்தினால் மால்கம் இரஞ்சித் அவர்கள், குண்டுவெடிப்பு தாக்குதல்களுக்குக் காராணமானவர்கள் தவறுகளை ஒப்புக் கொண்டால் அதனை ஏற்று மன்னிக்கத் தயாராக இருக்கின்றோம் என்று கூறினார். மேலும் தாக்குதல் பற்றிய வெளிப்படையான சுதந்திரமான விசாரணை நடைபெறும் என்று இலங்கையின் முன்னாள் அரசுத்தலைவர் மைத்திரிபால சிரிசேனா தன்னிடம் கூறியதாகவும், விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளை காவல்துறை மற்றும் நீதித்துறையிடம் ஒப்படைக்கலாம் என்று தான் பரிந்துரைத்ததாகவும் பேராயர் அவர்கள் கூறியுள்ளார்.





# இயேசு உம்மை
## அவரது மறைத் தூதராக அழைக்கிறார்

பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

**“நீ**ங்கள் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்” (திப 1:8) என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு உலக மறைத்தூதர் தினத்தைக் கொண்டாடி சிறப்பிக்கின்றோம். இறையாட்சியே இயேசுவின் நற்செய்தி. திருமுழுக்குப் பெற்றதும் அப்பா அனுபவத்தில் மூழ்கி, அப்பாவின் திடமான சான்றிதழைப் பெற்றுத் திடமாகப் பணி செய்ய ஆரம்பித்துவிட்டார் இயேசு. “காலம் நிறைவேறி விட்டது; இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது; மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்” (மாற் 1:15) என்று முழக்கமிட்டார். “ஊர்கள் தோறும் இந்த நற்செய்தியைப் பறைசாற்றினார்” (மாற் 1:35-39). சத்தம் இன்றி, சலனம் இன்றி, சபதம் இன்றி இறையாட்சி முழக்கமும் இல்லை என்பதை நிரூபித்தார். இறையாட்சி முழக்கத்தோடு இயேசு தமது பணி வாழ்வை ஆரம்பித்தார். “உமது ஆட்சி வருக” (லூக் 11:2) என்று தந்தையிடம் செபித்தார். இறையாட்சிதான் இயேசு கண்ட கனவு, காட்சி *(Vision)*. அதனை இவ்வுலகில் தொடங்கி வைத்தவர் இயேசு.

இறையாட்சி என்பது என்ன என்பதனை இயேசு உவமைகள் வழியாக வெளிப்படுத்தினார். இறையாட்சி கடுகுவிதை, புளிப்பு மாவு, நிலத்தில் விதைக்கப்பட்ட விதை, கடலில் போடப்பட்ட வலை, முத்து, புதையல் (மத் 13, லூக் 13:18-21) ஆகியவற்றிற்கு ஒப்பாகும் என்றார். இறையாட்சி முதலில் இறைவனின் செயல்பாடு. இதன் வளர்ச்சியை சிலர் தாமதப்படுத்தலாம். ஆனால் யாரும் தடுக்க இயலாது. இதன் தொடக்கம் சிறிது. ஆனால் அதன் வளர்ச்சி பெரிது; பிரமாண்டமானது. இறையாட்சிக்குத் தங்களை உட்படுத்து வோர் பேறுபெற்றோர்.

“நீங்கள் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்” (திப 1:8) என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப, நாம் ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்ட திருமுழுக்கின் வழியாக மறைதூதுப் பணியாளர்களாக வாழ அழைக்கப் படுகிறோம். திருஅவை என்பது மறைத்தூதுப் பணி ஆர்வமிக்கதாக தொடக்கம் முதல் இன்று வரை இருந்து வருகின்றது. திருஅவையின் உறுப்பினர்களாகிய நாம் தனித்து அல்ல; மாறாக சமூகமாக மாற அழைக்கப்படுகின்றோம். இருவர் இருவராக ஆண்டவர் இயேசு இன்றும் நம்மை அனுப்புகிறார். இலங்கை நாட்டின் முதல் புனிதரான யோசப் வாஸ் புனிதராகத் தகுதி பெற்றுவிட்டதால் அவரது அடிச்சுவட்டில் ஒவ்வொருவரும் நற்செய்திக்கும், தகுதிக்கும், உண்மைக்கும், திருஅவைக்கும் சான்று பகர்ந்து உலகிற்கு ஒளியாக சாரமுள்ள உப்பாக விளங்க அழைக்கப்படுகின்றோம்.

தொடக்கால கிறிஸ்தவர்களிடமிருந்த அதே மனநிலை, அதே தைரியம் சான்று பகரும் குணம்,




ராசா உங்களோட ஒரு கதை. நடராசாவை எல்லோரும் ராசா, ராசண்ணை என்று அழைப்பர்.

கனகு, கனகசபையையும் கனகு, கனகண்ணை என்று அழைப்பர்.

கனகு கூறுகிறார்,

"என்ன அப்பிடித் தலை போற கதை..."

"கனகு.... உங்களுக்கொரு தருமதி இருக்கிறது. அதைத் தரத்தான் வந்தனான்...". கனகசபை எப்பவோ... பத்து வருசமிருக்கும். ஒருநாள் வீட்டிற்கு வந்து உடனை தனக்கொரு இரண்டாயிரம் ரூபா அவசரமாகத் தேவை என்று வாங்கியது ஞாபகத்திற்கு வருகிறது. கனகசபை வீண் செலவுகாரனில்லை. ஆனால் வருமானம் குறைவு. ஏதோ அவசரமென்று வந்து காசு கேட்கும் போது கொடுத்து உதவியது.

கொஞ்சக் காலமாக ஆளைக் காணவில்லை.

மாத்தறையிலயோ அம்பலாங்கொடையிலையோ கடையில் நிற்பதாக அறிந்தார் நடராசா.

அரசாங்க உத்தியோகம். அளவான வருமானம். அதற்கேற்ற சிக்கனமான வாழ்க்கை. வயல், தோட்ட வருமானங்களும் இருந்ததால் கனகசபை கேட்டதும் நடராசா கொடுத்தார்.

இன்று கனகசபை அந்தக் கொடுக்கல் வாங்கலை முடிக்க வந்திருக்கிறாரென்பது புரிகிறது.

"ராசா இண்டைக்கு நான் நல்ல வசதியாயிருக்கிறன்....."

"ஓமோம் கேள்விப்பட்டனான். கடையொன்று வாங்கி நடத்துவதாக..."

"ஊர்ப்பக்கம் வாறது குறைவு. கடை வேலை நினைச்ச மாதிரி விட்டிட்டு வரேலா..."

"உண்மைதான். தன்னாள் நிக்கிறது போல வராது...."

"இப்பவும் ரெண்டு நாள் லீவு கிடைச்சதாலயெல்லோ வந்திருக்கிறன்....."

கனகசபையில் புதுப்பொலிவு தெரிகிறது. எல்லாக் காலமும் ஒருமாதிரியே.

"ராசா அண்டைக்கு உங்களிட்டை வாங்கிய காசைத் தரவேணும் என்று தான் வந்தனான்.

"இல்லைக் கனகு... அது இருக்கட்டும்...." என்றார் நடராசா.

அன்று வாங்கிய இரண்டாயிரம் ரூபா தானே என்று தான் நடராசா வேண்டாம் என்கிறாரோ. கனகசபைக்குப் புரியவில்லை.....

"நான் வட்டியும் போட்டுத் தாறன்....."

"சீச்சீ... நான் அண்டைக்கு உங்களுக்கு வட்டிக்குத் தரேல்லையே...."

"அப்ப நீங்க எவ்வளவெண்டு சொல்லுங்கோ.... நான் தாறன்....."

"வேண்டாம் கனகு...." என்று நடராசா மறுத்து விட்டார்.

"இப்ப நான் நல்ல வசதியாயிருக்கிறன் ...." என்றார் கனகசபை.

"நான் இப்பொன்றும் வசதியில்லாமல் இருக்கேல்லையே...."

கனகசபை எவ்வளவோ கதைத்தும் நடராசா வாங்கவே இல்லை.

கனகசபை திரும்பிப் போகும் போது அட நான் எப்பவும் அவருக்கு கடன்காரன் தானே என்பது மனத்தை உறுத்துகிறது.

■■■■ ■■■■ ■■■■


பற்றார்வமிக்க செயல்பாடு அனைத்தும் நமதாக வேண்டும். "ஆண்டவரே என்னை அனுப்பும்" என்று ஆண்டவருக்காகப் புறப்பட்டுச் செல்லும் மனநிலை நம்மிடம் ஏற்பட வேண்டும். தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட நாம் அனைவரும் திருத் தூதுப் பணியின் அனைத்து நடவடிக்கைகளும் ஒருங்கிணைந்து, ஆழப்படுத்தி வளர்த்தெடுப்போம். எல்லோருமே நற்செய்தியின் தூதுவர்களாக, மறைத்தூதுவர்களாக அழைக்கப்படுகிறோம்; அனுப்பப்படுகிறோம். ▌

# இலக்கிய மஞ்சரி



## சந்தனசாமிஜோசப் (தெளிவத்தை ஜோசப்)

- ஆழியோன்



அண்மைக்காலமாக, தமிழ் இலக்கிய ஆளுமைகளை நாம் இழந்துவருகின்றோம். திறனாய்வாளர் கே.எஸ். சிவகுமாரன் அவர்களைத் தொடர்ந்து தெளிவத்தை ஜோசப் என்றறியப்பட்ட சந்தனசாமி ஜோசப் அவர்களையும் நாம் இழந்துவிட்டோம். இவ்வாண்டு அக்டோபர் மாதம் இருபத்தோராம் நாள் அதிகாலை நல்ல நித்திரையிலேயே அவர் மறைந்துவிட்டார். 1934ம் ஆண்டு பெப்ரவரி பதினாறாம் திகதி பதுளை மாவட்டத்தின் ஹாலி எல என்னும் பகுதியில் உள்ள ஊவாக்கட்டவளை என்னுமிடத்தில் ஜோசப் அவர்கள் பிறந்தார். அவர் தனது எண்பத்தெட்டாவது அகவையில் வத்தளையில் உள்ள அவரது வீட்டில் பிரிந்துவிட்டார்.






தமிழ்நாடு கும்பகோணத்தில் (அவரது பெற்றோரின் பூர்வீக இடம்) கல்வியை மேற்கொண்டுவிட்டு தாயகம் திரும்பி பதுளை புனித.பீற்றர் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். பின்னர் தெளிவத்தை என்ற இடத்தில் தோட்டப் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றினார். எனவே ஜோசப் என்ற தனது பெயரின் முன் தெளிவத்தை என்பதையும் இணைத்து 'தெளிவத்தை ஜோசப்' என்ற பெயரில் இலக்கியம் படைக்கலானார். கணக்கியல் துறையிலும் அவர் ஈடுபாடு கொண்டிருந்தமையால் பிற்காலத்தில் கொழும்பின் தனியார் நிறுவனமொன்றில் கணக்காளராகவும் பணியாற்றியுள்ளார்.

மலையக மக்களில் வாழ்வியலை படம்பிடித்துக் காட்டும் சிறுகதைகள், நாவல்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பவற்றை விடாமுயற்சியுடன் எழுதினார். இலங்கையில் மலையக மக்களின் வாழ்க்கைப்பதிவுகள் ஆரம்பமாகி தற்போது இருநூறு வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் 1960 களில் தான் மலையக எழுத்துறை எழுச்சிபெறத் தொடங்கியது. அதுவும் தெளிவத்தை ஜோசப் அவர்களில் இலக்கியப்படைப்புகள் மூலமே அது சத்தியமானது எனலாம்.

ஐம்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை இவர் எழுதியுள்ளார். எழுபதுகளில் தென்னிந்திய இலக்கியங்கள் இலங்கையில் தவிர்க்கப்பட்டிருந்தன. (அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையால் உள்நோக்கிய பொருளாதாரக் கொள்கை - இறக்குமதிகளில் கட்டுப்பாடு) எனவே வீரகேசரிப் பிரசுரங்கள் அவற்றை ஈடுசெய்தன. 1974ல் தெளிவத்தை ஜோசப்பின் ''காலங்கள் சாவதில்லை'' நாவல் வீரகேசரி பிரசுரமாக வெளிவந்தது: 1975ம் ஆண்டு வெளியான வி.பி.கணேசனின் ''புதிய காற்று'' என்னும் இலங்கை திரைப்படத்திற்கு இவர் திரைக்கதை வசனம் எழுதியிருந்தார். அப்படத்தை மட்டக்களப்பு ராஜேஸ்வரா திரையரங்கில் நான் பார்த்து வியந்ததுண்டு (தற்போதைய காகிள்ஸ் பூட்சிட்டி கட்டிடம் - பஸ் நிலையத்திற்கு முன்பாக).

பின்னர் 1979ல் வெளிவந்த இவரின் கதைத்தொகுதியான ''நாமிருக்கும் நாடே'' தேசிய சாகித்திய விருதைப் பெற்றுக்கொண்டது. இரண்டு தடவைகள் இவ்விருதை இவர் பெற்றுக்கொண்டார். கலாபூசணம் என்னும் விருதை கலாசார அமைச்சு இவருக்கு கொடுத்திருந்தது. இவற்றுக்கெல்லாம் மேலாக இலங்கையின் இலக்கியத்திற்கான உயர்விருதான ''சாகித்தியரத்னா'' இவருக்கு கிடைத்தது.

இவரை பலநாடுகளும், பல்கலைக்கழகங்களும் அழைத்து கௌரவித்திருந்தன. ''விஷ்ணு புரம் விருது''ம் இவருக்கு கிடைத்தது. 'விஷ்ணுபுரம்' விருது தென்னிந்திய எழுத்தாளர் ஜெயமோகன் அவர்களின்

# தீர்க்க தரிசனம்



கவிதாயினி சுஜி பொற்செல்வி



புண்ணிய பூமி
இலங்கை மண்ணில்
கண்ணியம் பேணிடல்
மறுத்திட முடியுமா

அறமும் அன்பும்
மாசுறும் நிலையோ
மறத்தை மறந்தே
வாழ்ந்திடல் தகுமோ

கனவுகள் யாவும்
பலித்திடல் வேண்டும்
நனவாக அவைகள்
உயிர் பெற வேண்டும்

பாலன் பிறப்பை
பிரபஞ்சம் உணர்ந்தே
ஞாலம் சிறக்க
வழி செய்தே வணங்கும்

இருள் சூழ்ந்த மனங்கள்
ஒளி பெற வேண்டி
அருள் பெறும் வாசகம்
எழுதிடல் வேண்டும்

நாளை நம் வானில்
விடிவெள்ளி தோன்றும்
காலை முழுவதும்
மலர்களால் நிறையும்

ஏழ்மை நிலையினை
அடியோடு வெறுக்கும்
தாழ்வு மனதினை
அழித்திடல் நன்றே

ஏற்றத்தாழ்வுகள்
மனங்களைக் கொல்லும்
மாற்றம் வேண்டும்
நல்லுள்ளம் பேணும்

பாலன் வருகையும்
அமைதியைத் தருமே
மாலைப் பொழுதும்
இருள் நீங்கி ஒளிருமே

காலம் சொல்லும்
உண்மையை அறியுமே
ஆன்றோர் எழுத்துக்கள்
உயிர் பெற்று வருமே

இன்றைய இன்னல்கள்
விலகியே ஓடுமே
அன்பினைச் சொரிந்தே
துன்பங்கள நீங்குமே

நல்லோன் வருகை
நிம்மதி தந்தே
நல்லோர் மனதை
ஆட்சியும் செய்யுமே

பொய்யா மொழிகள்
இறையன்பை உணர்த்தும்
இவைதான் தீர்க்கத்தின்
தரிசனம் என்றுரைக்கும்

நம்மை தெரிந்து கொள்ளாமல் வெளி உலகத்தை தெரிந்துகொள்ள முடியாது. நம்மை தெரிந்துகொண்ட பிறகே வெளி உலகத்தில் தெரிந்துகொள்ள ஒன்றுமே கிடையாது.

– ரமண மகரிஷி –

மற்றவர்களுடைய துயரத்தை கண்டு இரக்கப்படுங்கள். ஆனால் உங்களுடைய சொந்த கஷ்டங்களை உங்களிடமே வைத்திருங்கள்.

– ஆக்டன் பிரபு –

ஏற்பாட்டால் வழங்கப்படுகின்றது. (எழுத்தாளர் ஜெயமோகனின் “வெந்து தணிந்தது காடு” என்னும் சிறுகதையே அப்பெயரில் திரைப்படமாகவும் வெளிவந்தது. இவர் ‘பொன்னியின் செல்வன் திரைப்படத்தின் வசனகர்த்தாக்களில் ஒருவர்).

“நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் அல்லது 1983” என்னும் நாவல் 1983ல் ஜோசப் பட்ட பயங்கர அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு அவரால் எழுதப்பட்டது).

இவ்வாறான ஆளுமையின் இழப்பு, தமிழ் இலக்கிய உலகின் தவிப்புக்குரியதே! ■



**வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் :** திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அன்ட் பேணிச்சர்ஸ்,142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி,
மட்டக்களப்பு. தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 41

1) நற்கருணையின் மகத்துவம் பற்றி இயேசு எவ்வாறு கூறியுள்ளார்?

.................................................................................................................................

.................................................................................................................................

2) புனித தேவசகாயம் பிள்ளை எப்போது பிறந்தார்? அவரின் பெற்றோரின் பெயர் என்ன?

.................................................................................................................................

3) பெந்தகோஸ்தே நாளன்று எருசலேமில் கூடியிருந்த திருத்தூதர் அனைவரும் இறை வார்த்தையை என்ன மொழியில் அறிவித்தனர்? ..................................................................

4) அமெரிக்காவில் தேசிய அளவில் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டிருந்த கருக்கலைப்பு உரிமையை அந்நாட்டு உச்சநீதிமன்றம் எப்போது இரத்து செய்தது?

.................................................................................................................................

5) நமது பங்கு மாமன்றத்தின் நோக்கம் என்ன? ..................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

6) திருத்தூதர் பவுலடியாரின் அடிநிலக் கெபிக்கு சென்று செபித்துள்ள திருத்தந்தையர்கள் யார்? ..........................................................................................................

.................................................................................................................................

7) யோவான் 5:14 கூறும் வசனம் என்ன? ..................................................................

.................................................................................................................................

8) உலக மறைபரப்பு ஞாயிறு இலங்கையில் இவ்வருடம் எப்போது கொண்டாடப்பட்டது?

.................................................................................................................................

9) எலிசபெத் மகாராணி எப்போது பிறந்தார்? ..................................................................

10) "தனக்கொன்றும் தெரியாவிட்டாலும் எல்லாமறிந்தவன் போல நடிப்பவன் தான் அரசியல்வாதி" என்று கூறியவர் யார்? ..................................................................

பெயர் : ..................................................................

முகவரி : ..................................................................

..................................................................

பங்கு / தொ.பே.இல : ..................................................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..................................................................

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 41**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி : 31.12.2022




**சரியான விடைகளை 2 அரசர்கள் 1:20 ஆகிய பகுதியில் இருந்து தெரிந்து எழுதவும்**

1. எலியா யோர்தான் நதிக்கரையினை கடப்பதற்கு செய்த வியத்தகு செயல் என்ன?
   ..........................................................................................
   ..........................................................................................
   ..........................................................................................
2. "வாழும் ஆண்டவர் மேல் ஆணை! உம் உயிர் மேலும் ஆணை! நான் உம்மை விட்டு பிரிய மாட்டேன்" எனக் கூறியவர் யார்? ..........................................
3. எலிசா முன்னறிவித்தவாறே கருவுற்று ஒரு மகனை பெற்றெடுத்த பெண் யார்?
   ..........................................................................................
4. எலிசாவின் வேலையாளின் பெயர் என்ன? ..........................................
5. சிரியா மன்னனின் படைத்தலைவனான நாமான் குணமடைவதற்கு "எலிசா" கூறிய அறிவுரை என்ன? ..........................................
   ..........................................................................................
6. இஸ்ராயேல் அரசன் ஆகாபின் மகன் யார் ..........................................
7. ஏகூ இறந்தபின் அவனை எங்கு அடக்கம் செய்தனர்? ..........................................
8. யோவாசின் மகன் அமட்சியா அரனாகும் போது அவனுக்கு எத்தனை வயதாக இருந்தது? ..........................................
9. யூதா நாட்டிற்கு உரிமையாக இருந்த நகர்கள் எவை?
   ..........................................................................................
10. எசேக்கியா சுவர் பக்கமாக முகத்தை திருப்பிக்கொண்டு ஆண்டவரை நோக்கி வேண்டுதல் செய்து கதறி அழுதது என்ன?
   ..........................................................................................
   ..........................................................................................
   ..........................................................................................

**பெயர் :** ..........................................

**முகவரி :** ..........................................
..........................................
..........................................

**பங்கு / தொ.பே.இல :** ..........................................

**அனுப்ப வேண்டிய தபாலகம் :** ..........................................
..........................................

<u>அனுப்பவேண்டிய முகவரி :</u>

**திருவிவிலியம் கற்போம் - 219**
**'தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி

**31.12.2022**

**(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)**




# போட்டி முடிவுகள்!



**திருவிவிலியம் கற்போம் – 217 விடைகள்**

1. கேர்சோன், கோகாந்து, மெராரி
2. நான் பண்பட்ட உதடுகள் இல்லாதவன். பார்வோன் எவ்வாறு எனக்கு செவி கொடுக்கப் போகிறான்.
3. ஆரோன்
4. தண்ணீர் இரத்தமயமாதல், ஈக்கள், கொசுக்கள், கல்மழை, தவளைகள், கால்நடை சாவு, கொப்புளங்கள், வெட்டுக்கிளிகள், காரிருள்
5. சணல், வாற்கோதுமை
6. இடையில் கச்சை கட்டி, கால்களில் காலணி அணிந்து கையில் கோல் பிடித்து விரைவாக உண்ணுங்கள்
7. புளிப்பற்ற அப்பங்களை
8. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோப்பின் வழி மரபினரான இஸ்ராயேல் மக்களுக்கு
9. மூன்று நாட்கள்
10. அவன்வீட்டு ஆண்கள் அனைவரும் விருத்தசேதனம் செய்தல் வேண்டும்.

**பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியில் சரியான விடைகளை எழுதி ரூபா 400/= பரிசு பெறுவோர்:**

* **பா. டிக்சன்,**
  தேவாலய வீதி,
  விபுலானந்தபுரம்,
  மயிலம்பாவெளி.

* **அக்ஷிதா டேனிஷா,**
  26/15, 3ம் குறுக்கு,
  இருதயபுரம் மேற்கு,
  மட்டக்களப்பு.

**போட்டியில் பங்குபற்றியோர் – 07 பேர்**
**சரியான விடையளித்தோர் – 07 பேர்**

* **ரா. கிறிஸ்,**
  பிரதான வீதி,
  ஆறுமுகத்தான் குடியிருப்பு,
  தன்னாமுனை.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 169 முடிவுகள்**

**1ம் பரிசு - 400/=**

* **பிரசாத் யோனா,**
  103 A, கோயில் வீதி,
  சொறிக்கல்முனை.

**2ம் பரிசு - 300/=**

* **ஜெ. ஜயலுஜன்,**
  விபுலானந்தபுரம்,
  மயிலம்பாவெளி.

**3ம் பரிசு - 200/=**

* **கு. ஏரலி அட்டலியா,**
  இல. 24, காளி கோவில் வீதி,
  பெரிய ஊறணி, மட்டக்களப்பு.

பங்குபற்றியோர் – 15பேர்

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. **(ஆ - ர்)**

# மௌனத்துக்கும் அர்த்தமுண்டு



அது ஒரு முன்னிரவுப் பொழுது... தன் ஆசிரமத்தின் தாழ்வாரத்தில் அமர்ந்து படித்துக்கொண்டிருந்தார் ஷிசிரி கோஜுன். அவர் படித்துக்கொண்டிருந்தது புத்த ஜாதகக் கதைகள். அதில் அப்படியே ஆழ்ந்து போயிருந்தார். திடீரென்று ஒரு சத்தம்...

''ஏய்... உன்னைத்தான்... இப்போ திரும்பப் போறியா, இல்லியா?''

ஷிசிரி நிமிர்ந்து பார்த்தார். ஒருவன் கையில் மின்னும் கத்தியுடன் அவரை முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அந்த ஆசிரமத்தில் வேறு யாராவது இருக்கிறார்களா என்று நோட்டம்விட்டான்.

''நீ யாரப்பா... உனக்கு என்ன வேண்டும்?''

''நானா... இன்னுமா உனக்குப் புரியவில்லை? உன் வீட்டில் திருட வந்திருக்கிறேன். ம்... உன்னிடம் இருக்கும் பணம் எல்லாவற்றையும் கொடு. இல்லாவிட்டால் என்ன நடக்கும் தெரியுமா?''

''என்ன நடக்கும்?''

''ம்... என் கையில என்ன இருக்கிறது பார்க்கவில்லையா? உனக்கு பணம் வேண்டுமா... உயிர் வேண்டுமா?''

''சரி, சரி... உனக்குப் பணம்தானே வேண்டும்? என்னைத் தொந்தரவு செய்யாதே! நீயே போய் எடுத்துக்கொள். அதோ... அந்த மேசை இழுப்பறையில் சிறிது பணம் வைத்திருக்கிறேன்'' என்ற ஜென் துறவி ஷிசிரி மீண்டும் புத்த ஜாதகக் கதையைப் படிப்பதில் ஆழ்ந்து போனார்.

திருடன் அசந்து போனான். இப்படியும் ஒரு மனிதனா? என் கையில இருக்கும் கத்தியைப் பார்த்துக்கூட இந்த ஆளுக்குப் பயம் வரவில்லையே! ஒருவேளை வேறு யாராவது பின்னால் வந்து நம்மை அடித்துப் போடத் திட்டம் போட்டிருக்கிறானா...? அப்படியிருக்காது. ஆளைப் பார்த்தாலே சாது மாதிரி தெரிகிறது. அப்படியே யாராவது இருந்திருந்தாலும், இந்நேரம் என்னைப் பிடிக்க வந்திருக்கவேண்டுமே..!' இப்படியெல்லாம் யோசித்தவனாக அவன் ஜென் துறவி காட்டிய மேசையருகே போனான். மேசையைத் திறந்தான். அதிலிருந்த மொத்தப் பணத்தையும் அப்படியே எடுத்தான். அப்போது ஷிசிரியின் குரல் கேட்டது,

''என்னப்பா பணத்தை எடுத்துவிட்டாயா? நான் சொன்னேன் என்பதற்காக மொத்தப் பணத்தையும் எடுத்துக்கொண்டு போய்விடாதே. நாளை நான் செலுத்த வேண்டிய வரி பாக்கி கொஞ்சம் இருக்கிறது. அதற்காகக் கொஞ்சம் பணத்தை மட்டும் எனக்காக வைத்துவிடு. என்ன... சரியா?''

அந்தத் துறவியின் குரல் அவனை என்னவோ செய்தது. அவனால் அதை அலட்சியம் செய்ய முடியவில்லை. எடுத்த மொத்தத் தொகையிலிருந்து சிறிது பணத்தை எடுத்து மேசை இழுப்பறையில் வைத்தான். கிளம்பினான். அவன் வாசல் கதவை அடைந்தபோது, ஷிசிரியின் குரல் அவனைத் தடுத்தது.

''ஏனப்பா... வந்தாய், என் பணத்தை எடுத்தாய். ஒரு நன்றிகூடச் சொல்லாமல் போகிறாயே... இது உனக்கே சரி எனப்படுகிறதா?''

திருடன் அதிர்ந்து போனான். அவன் ஷிசிரியின் அருகே வந்தான். ''எனக்குப் பணம் கொடுத்ததுக்கு ரொம்ப நன்றி ஐயா...'' என்றான். வெளியேறினான். ஷிசிரி மறுபடியும் வாசிப்பதில் ஆழ்ந்துபோனார்.

அந்தத் திருடன் வெகுநாள்களாக, பல வழக்குகளாக உள்ளூர் காவலர்களால் தேடப்பட்டு வந்தவன். ஷிசிரியின் ஆசிரமத்திலும் அவன் கைவரிசைக் காட்டிய செய்தி வெளியே பரவியது. காவலர்கள் தங்கள் தேடுதல் வேட்டையைத் தீவிரப்படுத்தினார்கள். ஒரு நாள் அவன் மாட்டிக்கொண்டான். விசாரணை நடந்தது. ஷிசிரியின் ஆசிரமத்தில் திருடியதற்கு சாட்சி சொல்லும்படி அவருக்கு அழைப்பு போனது. அவரும் வந்தார். அவரிடம் விசாரித்தார்கள்.

''இவன் என்னிடம் எதையும் திருடவில்லை. என்னிடமிருந்து சிறிது பணத்தைப் பெற்றுக்கொண்டான். அதற்கு நன்றிகூட சொல்லிச் சென்றான்'' என்றார் ஷிசிரி கோஜுன். அப்படி அவர் சொன்னது அவன் உள்ளத்தைத் தொட்டுவிட்டது. ஆனாலும், பிற குற்றங்களுக்காக அந்தத் திருடன் சிறையில் அடைக்கப்பட்டான். வெளியே வந்ததும், அவன் ஷிசிரியிடமே சீடனாகச் சேர்ந்தான். பல ஆண்டுகள் அவருடன் இருந்து ஞானமும் பெற்றான்.

■■■■





தூய சதாசகாய அன்னை புதிய ஆலயம் திறப்புவிழா - மகிழூர்முனை







மறைமாவட்ட மேய்ப்புப் பணி மாநாடு - 2022



அருட்சகோதரர் ஜெயராசா வினோஜன், CRS இன் திருத்தொண்டர் திருநிலைப்படுத்தல் - மியானி தன்னாமுனை.




மறைபரப்பு ஞாயிறு கொண்டாட்டம் - கல்முனை மறைக்கோட்டம்.



தேவநற்கருணை, உறுதிப்பூசுதல் வழங்கல் - அம்பாறை



தேவநற்கருணை, உறுதிப்பூசுதல் வழங்கல் - சகாயபுரம்

"அனைவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துகள்!"